## விடுதலைப் போராட்ட வரலாறு

### 1. கோபால கிருஷ்ண கோகலே (1866 – 1915)

- இந்திய சுதந்திர வரலாற்றிலும், இந்திய தேசியக்காங்கிரசின் வளர்ச்சியிலும் மிகுந்த பங்குகொண்டவர்கள் கோபால கிருஷ்ண கோகலேயும் பாலகங்காதர திலகரும் ஆவர். பின்னரால் பாரதத்தின் மாணிக்கம், மராட்டியத்தின் அணிகலன், தலைசிறந்த தொண்டர், என்ற போற்றப்பெற்ற பெருமையுடையவர் கோபாலகிருஷ்ண கோகலே ஆவார். இவர் இந்திய விடுதலைக்கு ஆணிவேர்போல் விளங்கி இந்திய தேசியத்தந்தை எனப் புகழ்பெற்ற மகாத்மா காந்தியடிகளுக்குத் குருவாகக் கருதப்பட்டார்.
- கோபால கிருஷ்ண கோகலே 1866 ஆம் ஆண்டில் மராட்டிய நாட்டிலுள்ள கோலாப்பூரில் பிறந்தார். இளமையிலேயே தம் தந்தையை இழந்தபோதிலும் தமையனாருடைய உதவியால் உயர்நிலைப்பள்ளிப் படிப்பை முடித்தார். ஆங்கிலப் பள்ளியொன்றில் பகுதிநேர ஆசிரியராக வேலைபார்த்து, அதனால் கிடைத்த ஊதியத்தைக் கொண்டு கல்லூரில் படித்துத் தம் பதினெட்டாம் வயதில் B.A. பட்டம் பெற்றார். ஓர் ஆசிரியராகத் தம்முடைய வாழ்க்கையைத் தொடங்கித் தம் இருபதாம் ஆண்டில் பேராசிரியராகவும், இருபத்திரெண்டாம் ஆண்டில் பம்பாய் மாநிலச் சட்டசபை அங்கத்தினராகவும், முப்பத்தொன்பதாம் ஆண்டில் இந்திய தேசியக் காங்கிரசின் தலைவராகவும் புகழடைந்தார்.
- மராட்டிய நாட்டில் தலைமை நீதிபதியாக இருந்து ஓய்வுபெற்ற மகாதேவ கோவிந்த ரானடேயின் கொள்கைகளைப் பின்பற்றி நிதானமாக எண்ணங் கொண்டிருந்தார். இடைவிடாது உழைத்து அரசியல் அறிவிலும், தெளிவிலும் மேன்மை பெற்றுச் சிறந்த சொல்வன்மையுடையவராகத் திழ்ந்தார்.
- தக்காணக் கல்விச் சங்கம் என்னும் அமைப்பில் ஆசிரியராகப் பணியேற்றுப் பின்னர் ஃபெர்குஷன் கல்லூரியின் (Fergussion Colleges) தலைவராக உயர்வு பெற்றார். பொருள் பெறுவதுமாத்திரம் அவருடைய நோக்கமன்று. திங்களொன்றிற்கு ரூ.70 மாத்திரம் ஊதியமாகப் பெற்றுக்கொண்டு இருபதாண்டுகள் ஆசியரியாகப் பணியாற்றினார். 1887 ஆம் ஆண்டில் பூனா நகரத்தில் அமைந்திருந்த சர்வஜன சபையினர் நடத்திய செய்தித்தாளின் பிரசுரராகப் பணியேற்றார்.
- 1897 ஆம் ஆண்டில் இங்கிலாந்திற்குச் சென்று, இந்திய அரசாங்கத்தின் செலவுகளைப்பற்றி வெல்பி குழுவினர் முன் எடுத்துக்கூறித் தம் சொல்வன்மையையும், ஆழ்ந்த அரசியல் - பொருளாதார அறிவையும் ஆங்கில மக்கள் உணரும்படி செய்தார். இந்திய அரசாங்கத்தால் விதிக்கப்படும் உப்புவரி ஏழைகளை வதைப்பதாகும் என்றும், இந்திய அரசாங்கத்தில் இந்தியர்கள் அதிகமான அளவில் பதவிகள் வகிக்க வேண்டும் என்றும், கர்சன்பிரபு காலத்தில் உண்டான வங்காளப் பிரிவினை நீக்கப்பெறுதல் வேண்டும் என்றும் வாதாடினார்.
- 1905 ஆம் ஆண்டில் இந்தியத் தொண்டர் சங்கம் (Servants of India society) என்ற அமைப்பைத் தோற்றுவித்தார். பொருள் சம்பாதிப்பதே முக்கிய நோக்கமாகக் கொள்ளாமல், பிறந்த நாட்டிற்குச் சேவை செய்யும் வகையில், கட்டுப்பாட்டுடன் இந்திய மக்களுடைய நலனுக்காகப் பாடுபடுவதே இச்சங்கத்தின் குறிக்கோளாகக் கொள்ளப் பெற்றது.
- நாட்டிற்கும், இந்திய ஏழைமக்களுக்கும் பணிபுரிவது ஒரு சமயப்பணியாகும். மக்கட்பணியே தெய்வீகப் பணியாகும் என்று அச்சங்கத்தின் விதிகளில் கூறப்பெற்றுள்ளன. இந்திய அரசியலில் எவ்விதமான பங்கும் கொள்ளாமல், இரவும் பகலும், உண்ண உணவின்றி, கடும் வெய்யிலும் மழையிலும் பனியிலும் நிலங்களில் உழைத்து ஆற்றொணாத் துன்பத்தை அனுபவித்து வந்த இந்தக் குடியானவர்களின்

கஷ்டங்களைப் போக்குவதற்கு இந்தியத் தொண்டர் கழகம் பாடுபடவேண்டும் என்று கோகலே கருதினார்.

- 1911 ஆம் ஆண்டில் கோகலே தென் ஆப்பிரிக்காவிற்குச் சென்றார். அங்கே காந்தியடிகள் தென்னாப்பிரிக்க இந்தியர்களிடையே சத்தியாக்கிரக இயக்கத்தைப் பரவச் செய்து வெற்றிபெற்ற முறையை இந்தியாவிலும் பின்பற்றலாம் என்ற காந்தியடிகளுக்கு உற்சாகம் அளித்தார் என நாம் உணரக்கூடும்.

**கோகலேயின் அரசியல் கருத்துக்கள்**

- இந்திய தேசிய இயக்கத்தில் கோபாலகிருஷ்ண கோகலேயின் செல்வாக்கைப் பற்றி இரு வகையான எண்ணங்கள் உருவெடுத்தன. இந்தியத் தீவிரவாதிகள் (Extremits) இந்திய அரசாங்கத்தின் அடிவருடி என்றும் மனத்திண்மையில்லாத நிமானவாதி என்றும் கோகலேயைப் பழித்துக் கூறினர். பிற்போக்குவாதிகள் அரசாங்கத் துரோகி என்று குற்றம் சாட்டினார்கள். ஆயினும் இவ்விரண்டு குற்றங்களுக்கும் கோகலே ஆளாகவில்லை.
- அரசியலில் வன்முறையையும் மிகுந்த மக்களுடைய விருப்பு வெறுப்புக்களை இந்திய அரசாங்கத்திற்கு எடுத்தியம்பினார். காங்கிரசின் கொள்கைகளை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாததற்குரிய காரணங்களைக் காங்கிரசிடம் கூறி அமைதி நிலவும்படி செய்தார். இந்திய மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே சுமுகமான உறவு நிலவுதற்குக் கோகலே பாடுபட்டார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியாவை ஆட்சி செய்வதைப் போல் என்றும் ஆட்சி புரியலாம் என்று ஆங்கிலேயர் நினைத்ததையும், பிரிட்டிஷ் பேரரசை விட்டு நீங்கி வன்முறையில் இந்தியா சுதந்தரம் அடைய வேண்டுமென்று நினைத்த இந்தியத் தலைவர்களையும் கோகலே கண்டித்தார்.
- நாட்டில் அமைதி நிலவி மக்கள் நல்வாழ்வு பெறுவதற்குக் கோகலே அரசாங்கத்துடன் பலவழிகளில் ஒத்துழைத்தார். 1910 ஆம் ஆண்டில் இந்தியச் செய்தித்தாள்களை ஒடுக்குவதற்கு ஏற்பட்ட சட்டம் மிகக் கொடுமையானதென்று மக்கள் நினைத்தபோதிலும், நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதற்கு அதுமிக்க அவசியமானதென்று கோகலே கருதினார்.
- இந்திய மக்கள் அமைதியான முறையில், நாளடைவில் தன்னாட்சி பெறவேண்டுமெனக் கோகலே விரும்பியபோதிலும், அரசாங்கமும் கூடிய விரைவில் அரசியல் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென வாதித்தார். 1909 ஆம் ஆண்டில் உண்டாக்கப்பெற்ற மார்லி - மிண்டோ அரசியல் சட்டத்தை மிகவும் தாராளமான அரசியல் அமைப்பெனப் புகழ்ந்தார். நாட்டில் மக்களுடைய விரும்பு வெறுப்புக்களை உணர்ந்து அரசியல் சீர்திருத்தங்களை ஏற்படுத்துவதுதான் அரசாங்கத்தின் கடன் எனக் கருதினார்.
- "பிரிட்டிஷ் அரசியலும், இந்திய மக்களும் ஒன்றுபட்டு ஆங்கிலேயரின் பெருந்தன்மையை அடிப்படையாகக் கொண்டு இந்திய அரசியல் சீர்திருத்தங்கள் அமையவேண்டு"மென்ற ஒரு கற்பனை உலகத்தை மனத்துட்கொண்டார். இந்திய அரசானங்கத்தைப் பகைத்துக் கொள்ளாமல் இந்திய மக்களுடைய நலனை அமைப்பதில் அரசியல் விரகராகக் கோகலே விளங்கினார்.
- மகாத்மா காந்தியடிகள் "சர் பிரோஸ்ஷா மெத்தா, இமயமலையையொத்தும், பாலகங்காதர திலகர் பெரியதொரு கடலைப்போலவும் விளங்கினார். ஆனால், கோபாலகிருஷ்ண கோகலே புனிதமான கங்கை நதியைப் போல் இருந்தார். தம்முடைய அமைதியான அரசியல் நடத்தையால் எல்லோரையும் தம் வசப்படுத்தினார். நான் அவருடைய வழியைப் பின்பற்றுவதில் ஆச்சரியமில்லை" எனக் கூறினார்.
- "கோகலேயவர்களுடைய நாட்டுப்பற்று கண்ணியமும் கட்டுப்பாடும் நிறைந்ததாகும்" என லாலா லஜபதிராய் கூறுவர். தம்முடைய நாட்டின் அரசியல் மேன்மைக்காகப் பாடுபட்ட இந்தியத் தலைவர்களில் சிறப்புடையவர் கோகலே என்று கர்சன் பிரபுவே கூறுவர். பொறுப்புள்ள அரசியல் அறிஞர் என்று மார்லிப்பிரபு கோகலே அவர்களைப் புகழ்ந்துள்ளார்.

**2. லோகமான்ய பாலகங்காதர திலகர் (1856 – 1920)**

- பாலகங்காதர திலகர் 1856 ஆம் ஆண்டில் இரத்தினகிரி நகரில், மராட்டிய அந்தண வகுப்பில் பிறந்தார். மராட்டிய அந்தணர்களுக்குரிய கல்வி பயின்று இந்திய சமய நூல்களையும் நன்கு கற்றுணர்ந்து பெருமை எய்தினார். ஆயினும், மேலைநாட்டுக் கல்விமுறையில் மிகுந்த பற்றுக்கொண்டு 1879 ஆம் ஆண்டில் சட்ட வல்லுநராகப் பட்டம் பெற்றார். இந்திய இளைஞர்கள் ஆங்கில மொழியைக் கற்றுணர்ந்து நாட்டின் விடுதலை இயக்கத்தில் பங்கு கொள்ள வேண்டுமெனத் திலகர் விரும்பி "கேசரி" "மராட்டியர்" என்று இரு செய்தித்தாள்களைத் தொடங்கினார். பூனா நகரத்தில் "தக்காணக் கல்விச் சங்கம்" என்ற அமைப்பும், பின்னர், "பெர்குஷன் கல்லூரி" என்ற கல்வி ஸ்தாபனமும் தோன்றி வளர்வதற்குப் பாடுபட்டார்.
- இந்திய மக்கள் உடலுறுதியும் மனோதிடமும் நாட்டுப்பற்றும் உடையவர்களாக இருத்தல் வேண்டுமென்ற கொள்கையில் திடமாக நம்பிக்கையுள்ளவர். பசுக்காத்தல், கணபதி விழா, சிவாஜி விழா முதலிய விழாக்கள் மராட்டிய நாட்டில் பரவுவதற்குத் திலகர் வழிகாட்டினார். சத்திரபதி சிவாஜி எவ்வாறு இஸ்லாமியர்களுடைய ஆட்சியினின்றும் விடுபட்டு இந்து சுயராஜ்ஜியம் ஒன்றை அமைக்க விரும்பினாரோ, அவ்விதமே ஆங்கிலேயருடைய ஆட்சியினின்றும் இந்தியர் விடுபட்டுச் சுயராஜ்ஜியம் பெற வேண்டுமென்று நம்பினார். சுயராஜ்ஜியம், இந்திய மக்களின் பிறப்புரிமை, அதைத் தடுப்பதற்கு எவருக்கும் உரிமை இல்லை எனக் கருதினார். மராட்டிய மக்களிடையே சுயராஜ்ஜிய ஆர்வத்தையும், அரசியல் விழிப்பையும் பரவும்படி செய்த லோமான்யாரைக் கண்டு ஆங்கில அரசியலார் மிக்க வெறுப்பும் பொறாமையும் கொண்டனர்.
- 1897 ஆம் ஆண்டில் திலகர்மீது அரச துரோகக் குற்றம் சாட்டப்பெற்று நீதிபதி ஸ்டராச்சி (Judge Strachey) என்பார் முன்னிலையில் விசாரணை நடைபெற்றது. அந்தக் குற்ற விசாரணையில் ஆறு ஐரோப்பிய ஜீரிகளும் மூன்று இந்திய ஜீரிகளும் இருந்தனர். ஐரோப்பியர்கள் அனைவரும் திலகர் குற்றவாளியெனத் தீர்ப்பளித்தனர். ஆனால், இந்திய ஜீரிகள் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. ஆயினும், திலகருக்கு 18 மாதங்கள் சிறைதண்டனை விதிக்கப்பெற்றது. 1895 ஆம் ஆண்டில் பூனா நகராட்சி உறுப்பினராக இருந்தார். 1896- 1897-ல் இந்திய நாட்டில் கொடியதொரு பஞ்சமும் ப்ளேக் என்னும் கொடிய நோயும் பரவின. அந்நோய் நாடு முழுவதும் பரவாமல் இருப்பதற்காகத் திரு.இரான்ட் என்னும் ஆங்கிலேயர் நியமனம் செய்யப்பெற்றார். போலிஸ் படையுடனும் கூலி ஆட்களுடனும் பூனா நகரத்தின் வீடுகளில் புகுந்து மக்களுடைய துணிமணிகள், குடிசை வீடுகள், மாடி வீடுகள், ஓட்டு வீடுகள் முதலிய கொளுத்தப்பட்டன. பூட்டப்பெற்று இருந்த வீடுகள் உரிமையாளர்களுடைய சம்மதமின்றித் திறக்கப்பட்டுத் தட்டுமுட்டுச் சாமான்கள் எல்லாம் வாரிச் செல்லப்பட்டன. பெண்களும் குழந்தைகளும் சித்திரவதைக் கொண்ட சிலர் ரான்ட் என்பாரைத் துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தினர். இச்செயல் திலகருடைய தூண்டுதல் பேரில் நடந்ததென அவர்மீது மீண்டும் அரசாங்கம் குற்றம் சாட்டியது. அதனால் 1908 – 1914 வரையில் பர்மாவில் மாந்தலே என்னுமிடத்தில் சிறைவாசம் அனுபவிக்க நேர்ந்தது. ஆங்கிலேர்கள் அமைதியான முறைக்குச் செவி சாய்க்க மாட்டார்கள் என்பதைத் திலகர் நன்குணர்ந்தார். ஆகையால், தீவிரவாதிகளின் கொள்கைகளை ஆதரித்து அவர்கள் கட்சியில் சேர்ந்தார்.
- 1905 ஆம் ஆண்டில் வங்காளப் பிரிவினை உண்டாயிற்று. இதை எதிர்த்துத் திலகர் ஒரு போராட்டத்தைத் தொடங்கினார். 1906 ஆம் ஆண்டில் நடந்த கல்கத்தாக் காங்கிரசிலும், 1907-ல் நடந்த சூரத் காங்கிரசிலும் திலகர் பெரும்பங்கு கொண்டார். பர்மாவில் சிறையிலிருந்தபொழுது "கீதா ரகசியம்" என்ற சிறந்த நூலை எழுத இந்திய மக்களுக்குப் புதிய தேசிய உணர்வை ஊட்டு வித்தார். 1914 ஆம் ஆண்டில் விடுதலையடைந்து தீவிரவாதிகளைத் தட்டி எழுப்பும் முயற்சியில் ஈடுபட்டார்.
- 1916 ஆம் ஆண்டில் அன்னிபெசன்ட் அம்மையார் இந்தியத் தன்னாட்சிக் கழகத்தைத் தோற்றுவித்தார். பாலகங்காதர திலகர் அன்னிபெசன்ட் அம்மையாரின் தன்னாட்சிக் கருத்தால் கவரப்பட்டார். பிரிட்டிஷ் போரில் இணைந்த தன்னாட்சியைச் சட்டபூர்வமான வழிகளில் பெறுவதும் அதை அடைய மக்கள் கருத்தை உருவாக்குவதும் திலகருடைய குறிக்கோள்களாயின.

- ❖ நாட்டின் பல பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்து தன்னாட்சிக் கருத்துக்களை மக்களிடையே பரப்புவதற்கும், அக்கழகத்திற்குத் தேவையான தொண்டர்களையும் நிதியையும் திரட்டுவதிலும் திலகர் வெற்றி பெற்றார். திலகர் தோற்றுவித்த கழகம் மராட்டியத்திலும் மத்திய மாநிலத்திலும் தீவிரமாகப் பணியாற்றியது.
- ❖ 1917 ஆம் ஆண்டில் தன்னாட்சி இயக்கம் உச்சக்கட்டத்தை அடைந்தது. பஞ்சாபிலும், டெல்லி நகரத்திலும் நுழையக் கூடாதெனத் திலகர்மீது தடைகள் விதிக்கப்பட்டன. மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் உண்டாயின. பிறகுதான் திலகர் தம்முடைய தன்னாட்சிக் கொள்கைகளைச் சிறிது தளர்த்தினார்.

**இந்திய தேசிய இயக்கத்தில் திலகருடைய பங்கு**

- ❖ இந்திய தேசியக் காங்கிரஸ் ஆங்கில அரசாங்கத்திடம் தங்களுடைய கொள்கைகளைக் கெஞ்சிக் கேட்பதை விட்டு "சுயராஜ்ஜியம் நம்முடைய பிறப்புரிமை, அதை நாம் அடையும் வரையில் கிளர்ச்சி செய்ய வேண்டும்" எனக் கருதினார். சுயராஜ்ஜியம் அமைவதில் வன்முறைச் செயல்களைப் பின்பற்றுவதும் அவசியமாகும் என்றும் கூறினார்.
- ❖ இந்திய மக்கள் அன்னியநாட்டுப் பொருள்களை வாங்காமல் விடுத்து சுதேசிப் பொருள்களையே வாங்க வேண்டுமெனக் கருதினார். ஆங்கில அரசாங்கத்தின் பெருமைகளைப் புகழ்வதை விடுத்து, ஆட்சியாளர்களை எதிர்த்துச் சுதந்திரம் பெறுவதே சிறந்ததாகும் என வாதித்தார். மகாத்மா காந்தி, சர்தார் படேல், ஜவஹர்லால் நேரு முதலிய தலைவர்கள் திலகருடைய கனவை நனவாக்கினார் என்று கூறலாம்.

**கோகலேயும் திலகரும்**

- ❖ தாம் எழுதிய "காங்கிரஸ் சபையின் வரலாறு என்னும் நூலில் திலகரையும் கோகலேயையும் பின்வருவமாறு பட்டாபி சீத்தாராமையா ஒப்பிட்டுள்ளார். இருவரும் முதல்தரமான நாட்டுப் பற்றுள்ளவர்கள். தங்களுடைய தாய் நாட்டிற்காகப் பலவகையான எண்ணங்களும் போக்குகளும் இருவேறுபட்டவையாகும். கோகலே மிதவாதக் கொள்கையைக் கையாண்டார். திலகரோ தீவிரவாதியாகத் திகழ்ந்தார். கோகலே இந்திய அரசியல் சீர்திருத்தங்களை ஆதரித்தார். திலகர் புதிய சுதந்திர அரசியலை அமைக்க விரும்பினார். கோகலே ஆட்சிமுறையையும் அரசியலையும் மாற்றியமைக்க விரும்பினார். திலகர் இந்திய சமுதாயத்தைச் சுதந்திர சமுதாயமாக அமைக்க விரும்பினார். கோகலே ஆங்கிலேயர்களை அன்பினால் வெற்றி கொள்ளக் கருதினார். திலகரோ அவர்களை அடியோடு வெளியேறும்படி செய்ய விரும்பினார். கோகலே ஆங்கிலேயரின் உதவியால் விடுதலைபெற விரும்பினார். திலகர் தன்கையே தனக்கு உதவியாகும் என நினைத்தார். கோகலேயின் செல்வாக்கு, கல்வி கற்ற நடுத்தர வகுப்பாரிடம் தாம். திலகரோ பாமர மக்களின் கருத்தைக் கவர்ந்தார். கோகலே இந்தியச் சட்டசபைகளில் தம் திறமையைக் காட்டினார். திலகரோ கிராம மக்களுடைய உள்ளங்களைத் திசை திருப்பிச் சுதந்திர ஆவலைக் கிளப்பினார். பிரிட்டிஷ் பேரரசில் சுயாட்சி பெறுவதைக் கோகலே தம்குறிக்கோளாகக் கொண்டார். திலகர், இந்தியா பூர்ணசுதந்திரம் பெறுவதை ஆதரித்தார். கோகலே பத்தொன்பதாம் நூற்றாண்டின் மனோநிலையுள்ளவர். திலகர் இருபதாம் நூற்றாண்டின் முன்னோடியாக இருந்தார்.

### 3. ஆசார்ய நரேந்திர தேவ் (1889 - 1956)

- ❖ புகழ்பெற்ற பண்டிதர், சமூகவாதி, தேசியவாதி என்றெல்லாம் பெயர்பெற்ற ஆசார்ய நரேந்திர தேவ் அவர்கள் ஒரு வழக்கறிஞர் ஆவார். ஒத்துழையாமை இயக்கத்தில் இணைந்து தன் வேலையை இழந்தவர்களில் இவரும் ஒருவராவார். 1934-ல் பாட்னாவின் சமூகநல மாநாட்டின் தலைவரானார். 1937-ல் உத்திரப்பிரதேச சட்டசபையின் உறுப்பினரானார். மேலும், காங்கிரஸ்ஸின் செயற்குழுவின் உறுப்பினராகவும் சிலகாலம் பதவி வகித்துள்ளார். 1948-ல் காங்கிரஸிலிருந்து வெளியேறி சமூகநலக்கட்சியை அமைத்து அதன் தலைவரானார். ஆசார்ய நரேந்திர தேவ் அவர்கள்

கல்வியாளராகவும் அறியப்பட்டுள்ளார். 1925-ல், காசி வித்யாபீடத்தின் முதல்வராகவும், பின்நாளில், லக்னோ மற்றும் பனாரஸ் பல்கலைக்கழகங்களின் துணை வேந்தராகவும், பதவி வகித்துள்ளார்.

### 4. ஆலன் ஆக்டேவியன் ஹியூம் (1829 - 1912)

❖ இந்தியாவின் சுதந்திரத்திற்கு ஒத்துழைப்பை மட்டுமன்றி உழைப்பையும் நல்கிய வெகுசில ஆங்கிலேயர்களில் A.O.ஹியூம் அவர்கள் குறிப்பிடத்தக்கவராவார். 1849-ல் இந்திய குடிமைப்பணியில் சேர்ந்த பிறகு அவர் இந்தியா வந்தார். சமூகத் தடைகளைக்கழளயும் பல சீர்திருத்தங்களை அவர் அறிமுகப்படுத்தினார். அவைகளில் சில, எடவாக்கியல் இலவசக் கல்வித்திட்டம், உயர்கல்விக்கான உதவித்தொகை, சிறுவர் சீர்திருத்தப்பள்ளி உருவாக்குதல் ஆகும். விவசாயத்துறையில் அதிக தரமான உற்பத்தியைப் பெருக்க, புதிய தொழிற்நுட்பத்தினை அறிமுகப்படுத்த அவர் பெரிதும் பாடுபட்டார். இந்தியாவிற்கு எதிரான நியாமில்லாத ஆங்கிலேய அரசின் கொள்கைகளை அவர் விமர்சித்தார். மேலும் காவல்துறை உயர் அதிகாரிகளிடம் சட்ட அதிகாரங்கள் அதிகரிப்பதைக் கடுமையாக எதிர்த்தார். லித்தன்பிரபுவின் ஆட்சிக்காலத்தின்போது இவரது விமர்சினங்களின் விளைவாக தலைமைச் செயலகத்திலிருந்து அவர் நீக்கப்பட்டார்.

❖ I.C.S பதவியில் ஓய்வு பெற்ற பிறகு, அக்காலத்தின் தேசியவாமிகளையும், அறிவாளிகளையும் இணைத்து இந்திய தேசிய அமைப்பை (Indian National Union) 1884 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் உருவாக்கினார். இது பிற்காலத்தில் இந்திய தேசியக் காங்கிரஸ் எனப் பெயரிடப்பட்டது. I.N.C. என்பது இந்தியா முழுமையும் செயல்பட்ட முதல் அரசியல் அமைப்பாகும். I.N.C.-ன் தந்தையாக ஹியூம் கருதப்பட்டார். அவர் ***அரசியலமைப்பில் சீர்திருத்தத்தை ஏற்படுத்த இரத்தமில்லா போர்க்களத்தில்*** இந்தியர்கள் போரிட உதவி செய்தார். (Bloodless Battles of Consitutional Reform) அவர் தனது மீதி ஆயுட்காலத்தை காங்கிரஸின் குறிக்கோளையும், இலக்கையம் இந்தியாவிலும் மற்ற வெளிநாடுகளிலும் பரப்புவதற்காக அர்ப்பணித்தார். இந்திய மக்களின் பாதிப்புகளை ஆங்கிலேய அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவருவதில் அவர் முக்கியப்பங்கு வகித்தார். அதற்காக அவர் லண்டனில் ஆங்கிலேய காங்கிரஸ் குழுவையும் (Brititsh Committee of Congress) இந்தியா என்னும் இதழையம் 1899-ல் துவங்கினார். அவரது வாழ்நாளில் இந்தியாவின் சுதந்திர தினத்தை அவர் பார்க்காவிடினம் அதற்கான அவரது முயற்சிகள் வீணாகவில்லை. அவரது அறிவின் குழந்தையான I.N.C. பெரிய அரசியல் போராட்டத்தை நடத்துவதில் வெற்றிக்கொண்டு, காலனி ஆதிக்கத்தை முடிவுக்குக் கொண்டு வந்தது.

### 5. அம்ரித்லால் விதாலால் தாக்கர் (தாக்கர் பாபா - 1869 - 1951)

❖ சமூக சீர்திருத்தவாதியாக அறியப்பட்ட, தாக்கர் பாபா அவர்கள், பாவ்நகரில் 1869 ஆம் ஆண்டு நவம்பர் 29 ஆம் நாள் பிறந்தார். 1890-ல் கட்டடப் பொறியியல் வல்லுனராகப் பட்டம் பெற்று அரசுப்பணியில் இணைந்தார். பின்னர், கிழக்கு ஆப்பிரிக்காவில் உகாண்டா ரயில்வேயிலும் பணியாற்றினார். இந்தியாவிற்கு திரும்பிய பின்னர், பம்பாய் நகராட்சியில் பொறியியல் வல்லுனராக இணைந்தார். 1914-ல் தன் வேலையை ராஜிநாமா செய்துவிட்டு சமூகசேவை செய்யத்துவங்கினார். இந்திய சமூகத்தின் உழைப்பாளிகள் (Servants of Indian Society) சங்கத்தின் உறுப்பினராகி, தீண்டத்தகாதவர்கள் மற்றும் மலைவாழ் மக்களின் உரிமைகளுக்குக் குரல் கொடுத்தார். பில் சேவா மண்டலம் (Bhill Seva Mandal) என்ற மையத்தைத் துவங்கினார். பாரதிய ஆடம்ஜதி சங்கம் (Bharathiya Adamjati Sangh) என்னும் வேறு சங்கத்தின் துணைத்தலைவராக சேவையாற்றினார். பூனாவின் விதவைகள் மையம் மற்றும் ஒடுக்கப்பட்டோர் நலக்குழு ஆகியவற்றிலும் இணைந்து செயல்பட்டார். காந்தி அவர்களால் ஆதரிக்கப்பட்ட சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு தாக்கர் பாபா அவர்கள் ஆர்வமுடன் பாடுபட்டார். 1933 - 1934 காலத்தில், பெரும்தலைவருடன் ஏற்பட்ட தொடர்பின் காரணமாக அவருடன் இவரும் இணைந்து ஹரிஜன சுற்றுலா சென்றார். காந்தி அவர்களால் உருவாக்கப்பட்ட ஹரிஜன சேவை சங்கம் (Harijan Sevak Sangh) செயலர் ஆனார். மேலும், அவர் மாநில மக்களின் இயக்கத்திலும் (State People's Movement) பங்கு பெற்றார். பிற்காலத்தில் இந்திய அரசியல் அமைப்பு நிர்ணய சபைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டார். கஸ்தூரிபா காந்தி தேசிய நினைவு நிதியின் (Kasturba Gandhi National Memorial Fund) செயலாளராகவும், கருவூலத்தலைவராகவும் சேவை செய்தார்.

## 6. ஆனந்த மோகன் போஸ் (1847 - 1906)

- ❖ வங்காளத்தின் தேசியவாதியான ஆனந்த மோகன் போஸ் அவர்கள் கல்கத்தாவின் இந்திய சங்கத்தினை (Indian Association of Calcutta) 1876-ல் துவக்குவதில் பெரும்பங்கு வகித்தார். இச்சங்கம் இந்திய மக்களை பொதுவான அரசியல் நிகழ்வுகளில் ஒருங்கிணைக்கும் நோக்கத்தில் அமைக்கப்பட்டது. நியாயமல்லாத பிரிட்டிஷாரின் கொள்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் செயல்பட்டது. சுரேந்திரநாத் பானர்ஜி அவர்களுடன் இணைந்து செயல்பட்டு அவர் இந்திய தேசிய மாநாட்டை அமைப்பதில், அதன் முதல் பகுதி 1883-ல் நடத்தவதில் உதவினார்கள். 1885-ல் துவங்கப்பட்ட இந்திய தேசிய காங்கிரஸிக்கு துவக்கமாக இந்த இந்திய தேசிய மாநாடு அமைந்தது. போஸ் அவர்கள் காங்கிரஸ் உருவாகக் காரணமானவர்களுள் ஒருவராவார். மேலும், அதன் மெட்ராஸ் பகுதியின் மாநாட்டினை 1898-ல் துவக்கி வைத்தார். இல்பர்ட் பில், வெர்னாகுலர் பிரஸ் சட்டம் மற்றும் வங்கப்பிரிவினை ஆகியவற்றிற்கு எதிரான போராட்டத்தில் பங்கு கொண்டார்கள்.

## 7. ஆசப் அலி (1888 - 1953)

- ❖ ஆசப் அலி அவர்கள் தனது சட்டப்படிப்பினை லிங்கனின் விடுதியில் முடித்தார். 1914-ல் இந்தியாவிற்கு திரும்பிய அவர் இங்கு வழக்கறிஞராக பணியாற்ற துவங்கினார். விரைவில் தேசியவாத அரசியலில் இறங்கிய அவர், ஹோம்ரூல் இயக்கம், ஒத்துழையாமை இயக்கம் மற்றும் பலவற்றில் ஆர்வமுடன் ஈடுபட்டார். காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்திற்கான அறிவிப்பின் காரணமாக தனது வழக்கறிஞர் தொழிலை விடுத்தார். காங்கிரஸ் செயற்குழு (Congress Working Committee) மத்திய சட்டக்குழு (Central Legislative Assembly) (1935 - 1947 வரை) செயற்பாட்டுக்குழு (Executive Council) இந்திய அரசு (1946 - 1947) உறுப்பினராக பணியாற்றியுள்ளார். சுதந்திரம் அடைந்த பிறகு, வாஷிங்டன்னிற்கான இந்தியாவின் முதல் தூதுவராக 2 ஆண்டுகள் (1947 - 1948) பணியாற்றினார். மேலும் ஒரிசாவின் ஆளுநராகவும், சுவிட்சர்லாந்திற்கான இந்தியாவின் தூதுவராகவும் அவர் பணியாற்றியுள்ளார். 1953-ல் அவர் மறைந்தார்.

## 8.பத்ருதீன் தியாப்ஜி (1844 - 1906)

- ❖ உண்மையான நாட்டுப்பற்று மிக்க பத்ருதீன் அவர்கள், இந்திய விடுதலைப் போராட்டத்தில் பல வழிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். விதிவிலக்காக உண்மையான, நியாயமான, நீதிபதியாக, தேசியத்தலைவர்களை சிறையில் அடைக்கும் அரசின் முயற்சிக்கு இடையூறு செய்து, புகழையும், ஒத்துழைப்பினையும் பெற்றார். அவர் அரசியல் நிகழ்வுகளில் பங்கெடுத்துக் கொண்டது, அவரது ஆழ்ந்த நாட்டுப்பற்றினை வெளியிட்டு, மதிக்கத்தக்க தலைவராக அவரை உருவாக்கியது. கல்வித்துறையில் பல சீர்திருத்தங்களை ஏற்படுத்தி சமூக சீர்திருத்தத் தலைவராகவும் பெயர் பெற்றார். கல்வியானது தாழ்ந்த பிற்பட்ட நிலையையும், அழியும் தன்மையையும் விட்டொழிக்கும் வகையில் செயல்பட வேண்டுமென அவர் விரும்பினார். மதம்சார நம்பிக்கை கொண்டு இஸ்லாமிய முறைகளை விரும்பிய பத்ருதீன் அவர்கள் சுதந்திரமான ஒருங்கிணைந்த இந்திய நாட்டைக் காண வேண்டும் என்று விரும்பி அதற்காக உயிரையும் அளிக்க விரும்பினார்.
- ❖ பத்ருதீன் தியாப்ஜி அவர்கள் 1844 ஆம் ஆண்டு அக்டோபர் 10 ஆம் நாள் உயர்குடும்பத்தில் பிறந்தார். இங்கிலாந்தில் கல்வி பெற்ற இவர், நல்ல வளமான கல்வி சாதனைகளையும், திறமைகளையும் கொண்டிருந்தார். 1867-ல் வழக்கறிஞர் குழுவிற்காக அழைக்கப்பட்டார். அவர் நடு ஆலயத்தில் (Middle Temple) இணைந்து பம்பாயில் இந்தியாவில் முதல் பாரிஸ்டராக வளர்ந்தார். பம்பாயில் ஒரு வித்தியாசமான ஒப்புநோக்க முடியாத தலைவராக உருவானார். அவரது சட்ட அறிவு, வாதாடும் திறமை, அவரது வழக்குகள், அவரது பாவனை போன்றவை பலவற்றிலிருந்தும் அவரை வேறுபடுத்திக் காட்டியது. 1895 மற்றும் 1902 ஆம் ஆண்டுகளில் பம்பாய் நீதிக்குழுவில் பணியில் அமர்த்தப்பட்டார். இந்தியாவின் இரண்டாவது இந்திய நீதிபதியானார். இருந்தாலும் பத்ருதீன் அவர்கள் நீதிபதியாக பணியாற்றியதல் அரிய தருணம் என்பது திலகர் அவர்களை ஜாமீனில் விடுதலை செய்ததாகும். திலகர் அவர்கள் வெளியிட்ட கேசரி செய்தித்தாளில் இருந்த ஒரு கட்டுரைக்காக அரசால் குற்றம் சுமத்தப்பட்டார்.
- ❖ 1882-ல் பத்ருதீன் அவர்கள் பம்பாயின் சட்டக்குழுவிற்காக (Bombay Legislative Council) பரிந்துரைக்கப்பட்டார். இந்திய தேசிய காங்கிரஸ் மற்றும் பாம்பே பிரசிடென்ஸி சங்கம் (Bombay

Presidency Association) ஆகியவற்றைத் துவக்குவதில் இவர் முக்கியப் பங்கு வகித்தார். 1887-ல், மெட்ராஸின் மூன்றாவது காங்கிரஸ் மாநாட்டினைத் துவக்கிவைத்தார்.

❖ பம்பாயின் அஜ்மன்-இ-இஸ்லாமின் (Anjuman-I-Islam) முதல் செயலராகவும், பிற்கால தலைவராகவம் பதவி வகித்த இவர், இஸ்லாமிய கல்வியில் நவீனமயம் தேவை என வலியுறுத்தினார். பெண்கள் கல்வியறிவு பெற்றால் மட்டுமே சமூகத்தில் அவர்களது சாயான இடத்தைத் தக்கவைத்துக் கொள்ள முடியும் என்று கூறினார். பர்தா முறை போன்ற மத நம்பிக்கை மற்றும் பழக்கவழக்கங்களை விட்டொழிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். நாட்டில் பல இனத்தைச் சார்ந்தவர்களும் உள்ளதை ஒப்புக்கொண்டுள்ள அவர், அவர்களின் ஆர்வங்களைப் பற்றியக் கருத்து அவர்களுக்கு இருக்கும் என நம்பினார். அதே நேரத்தில், இந்தியர்கள் என்ற முறையில் பொதுவான எண்ணங்களையும், ஆர்வங்களையும் கொண்டிருக்க வேண்டும் என்றும் அந்நிலையை எட்ட அவர்கள் போரிட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

### 9. பாலிராம் கேசவ்ராவ் ஹெட்ஜ்வார் (1899 - 1940)

❖ ஹெட்ஜ்வார் அவர்கள் ஒரு மருத்துவ பட்டம் பெற்றவராவார். இவர் இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஆர்வமுடன் பங்குகொண்டார். இவர் காங்கிரஸிலும், திலகரின் ஹோம்ரூல் இயக்கத்திலும் இணைந்திருந்தார். 1925 ஆம் ஆண்டு செப்டம்பர் 27 ஆம் நாள் ராஷ்டிரிய ஸ்வயம் சேவக் சங்கம் (Rastriya Swayam Sevak Sangha) என்ற ஒன்றைத் துவக்கியதன் மூலம் அனைவராலும் அறியப்பட்டார். அவரது இம்முயற்சியே சரித்திரத்தில் அவர் இடம்பெறக் காரணமாகிறது.

### 10. பக்கிம் சந்திர சட்டோபதேயே (1838 - 1894)

❖ பக்கிம் சந்திர சட்டர்ஜி என்றும் அழைக்கப்படும் இவர் மில்லியன் கணக்கான இந்தியர்களின் இதயங்களில் "வந்தே மாதரம்" என்ற பாடலின் மூலம் தாய்நாட்டின் மீதான நேசத்தை உருவாக்கிய திறமையான எழுத்தாளராகவும், தத்துவக் கருத்துக்கள் கொண்டவராகவும் இருந்தார். இந்திய விடுதலைப் போராட்டத்தில் அவரது பங்கினை வெளிப்படையான சாதனைகளைக் கொண்டு கணக்கிட முடியாது. இருப்பினும், மதம் சார்ந்த நம்பிக்கைகளில், நாட்டின் கலாச்சாரத்தை முழுமையாக ஆங்கிலேயரின் (வெளிநாடுகளின்) கலாச்சாரத்தை போட்டியிடும் வகையில் மாற்றியமைக்க வேண்டும் என்று குரல் எழுப்பினார்.

❖ கல்கத்தா பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றபின் பக்கிம் சந்திர சாட்டர்ஜி அவர்கள் வங்காள அரசின் குடிமைப்பணி மற்றும் நிதித்துறையில் பணியில் அமைந்தார். 1864-ல் வங்கமொழியில் துர்கேஸ்நந்தினி (Durgesnandini) என்னும் நாவலை வெளியிட்டு மக்களுக்கு அறிமுகமானார். அவர், 11 நாவல்களும், நகைச்சுவை மற்றும் சிறுகதைத் தொகுப்புகளில் முறையே மூன்று பகுதிகளையும், தத்துவ மற்றும் மத கருத்துக்கள் கொண்ட புத்தகங்களையும், சில கட்டுரைகளையும் வெளியிட்டு எழுத்துத்துறையில் தன் பங்கினை அளித்துள்ளார். அவரது இதழான பங்காதர்சன் (Bangaadarsan) வங்க மொழி இலக்கியத்திற்கு தனது சமூக மற்றும் இலக்கியக் கருத்துக்கள் மற்றும் பார்வையின் மூலம் பெரும் பங்களிப்பினை அளித்துள்ளார்.

❖ அந்நியரின் ஆட்சிக்கு இந்தியர்களின் பணிவக்கு தொடக்க காலத்திலிருந்தே அவர்களது கலாச்சாரத்தை ஒப்பிட்டுள்ளார். இந்திய மக்களின் மனதில் சுதந்திரம் மற்றும் தன்னாட்சி பற்றிய எண்ணம் குறைவாகவே இருந்துள்ளது என்று குறிப்பிடுகிறார். அவர்களது பணிவிற்கு அவர்களது கலாச்சாரமே காரணம் என்றும் கூறுகிறார். மதம் சார்ந்த கலாச்சாரத்தின் பார்வையில் கிழக்குநாடுகள் மேற்கத்திய நாடுகளுக்கு உயர்ந்த நிலையிலும் சமூக முன்னேற்றம் மற்றும் செழுமையில் தாழ்ந்த நிலையிலும் உள்ளது. எனவே சட்டர்ஜி அவர்கள், மத நம்பிக்கைகளின் உருவாக்கம் மற்றும் அறிவியில் மற்றும் தொழிற்சாலைகளின் மூலம் மேலைநாடுகள் எட்டிய பொருள்வளத்தைப் பெற முயற்சி எடுக்க வேண்டும் எனக் கெஞ்சி கேட்டுள்ளார். இந்திய சமூகத்தின் அவசியத்தேவையாக முழுமையான கலாச்சார மாற்றம் வேண்டும் என்று தனது தேசிய கலாச்சாரக் கருத்தை அவர் வெளியிட்டுள்ளார்.

❖ ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டிற்குள் உள்ள சட்ட அமைப்புகளின் திட்டங்களின் மூலம் சமூக மாற்றத்தை கொண்டுவர முடியும் என்பதில் மிகக்குறைந்த நம்பிக்கைக் கொண்டிருந்தார். கல்வியின் மூலம் மட்டும் புதிய தேசிய மதத்தை உருவாக்க முடியும் என்று அவர் நம்பினார். தேசியக் கல்வியின் பிரச்சினைகளைத்

தீர்க்கும் திறமையான கலாச்சாரத் தலைமையினை உருவாக்க எல்லையில்லா கல்வியைப் பரப்ப அவர் விழைந்தார். பரவலான நன்மை பெற, கல்வியில் பெரியளவில் வழிகாட்டுதல்களை வழங்க கலாச்சார நிறுவனங்கள் அவசியம் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

### 11.பரீந்திரகுமார் கோஷ் (1880 - 1959)

- வங்காளத்தினைச் சேர்ந்த தேசியவாதியான பரீந்திரகுமார் கோஷ் அவர்கள் அரவிந்த் சோஷ் அவர்களின் தத்தவ சீர்திருத்தக் கருத்துக்களின் மூலம் பெருமளவில் ஈர்க்கப்பட்டார். பல நாட்டுப்பற்று மிக்க நடவடிக்கைகளில் அரவிந்த் சோஷ் அவர்களுக்கு உதவி செய்தார். குறிப்பாக வங்காளத்தில் சுதேசி இயக்கத்திற்கு உதவியதைக் கூறலாம். 1902-ல் கல்கத்தாவின் அனுஷிலன் சமிதி (Anushilan Samiti) என்னும் ரகசிய அமைப்பு துவங்க முயற்சி எடுத்துக் கொண்டவர்களில் இவரும் ஒருவராவார். 1906, ஏப்ரலில் யுகந்தர் என்னும் வார இதழை இளைஞர்களிடையே சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்புவதற்காகத் துவக்குவதில் உதவினார். 1908-ல் 34 சீர்திருத்தவாதிகளுடன் இவரும் கைது செய்யப்பட்டார். மரணதண்டனை விதிக்கப்பட்ட அவர் பின்னர் ஆயுள்தண்டனையாக குறைக்கவும் பெற்றார். 1919 ஆம் ஆண்டில் விடுதலைப் பெற்ற பிறகு, தி ஸ்டேட்ஸ்மேன் மற்றும் பாசுமதி (The Stateman and Basumati) ஆகியவற்றுடன் தன்னை இணைத்துக் கொண்டார்.

### 12. புலாபாய் தேசாய் (1877 - 1946)

- புலாபாய் தேசாய் அவர்கள் சூரத்தில் விவசாயக் குடும்பத்தில் பிறந்தார். கல்கத்தாவில் கல்வி கற்று சில காலங்கள் பம்பாயில் அரசுத் தலைமை வழக்கறிஞராகப் (Advocate General) பணியாற்றினார். 1916-ல் ஹோம்ரூல் இயக்கத்தில் இணைந்தார். 1930-ல் இந்திய தேசிய காங்கிரஸின் சார்பில் ஒன்பது ஆண்டுகள் பதவி வகித்தார். 1944-ல் தேசாய் அவர்கள், சட்டசபையில் காங்கிரஸ் தலைவராக, சிறப்பான வகையில் பணியாற்றி, மத்தியில் இடைக்கால அரசை உருவாக்குதில் காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக் இடையே பேச்சுவார்த்தை நடத்தினார். விளைவாக தேசாய் - லியாகத் (சட்டசபையின் முஸ்லீம் லீக் கட்சியின் உதவித்தலைவர் லியாகத் அலிகான் ஆவார்) ஒப்பந்தம் உருவானது. தேசாய் அவர்களின் நினைவில் நிற்கும் சாதனைகளில் கடைசியில் உள்ளது இந்திய தேசிய ராணுவத்தின் கைதிகளில் பாதுகாப்பு நடவடிக்கை ஆகும். புலாபாய் தேசாய் அவர்கள் 1946 ஆம் ஆண்டு மறைந்தார்.

### 13. பிபின் சந்திரபால் (1858 -1932)

- பிபின் சந்திரபால் அவர்கள் 1858 ஆம் ஆண்டு நவம்பர் முதல் நாள் தற்போது வங்கதேசத்தில் உள்ள சில்ஹிட் மாவட்டத்தின் பாயில் கிராமத்தில் பிறந்தார். நாட்டுப்பற்று மிக்கவர், பேச்சாளர், ஆசிரியர், போதகர், எழுத்தாளர் மற்றும் விமர்சகர் என்று பல முகங்களைக் கொண்ட பிபின் சந்திரபால் அவர்கள் வங்காள மறுமலர்ச்சி இயக்கத்தினை (Bengal Renaisence Movement) தோற்றுவித்தார். இந்திய தேசியவாத இயக்கத்தின் (Indian Nationalist Movement) தலைவராகவும் இருந்தார். அவர் தன் வாழ்வின் தொடக்கத்திலேயே பிரம்ம சமாஜத்தில் இணைந்து சமூக மூடநம்பிக்கைகளுக்கு எதிராக பாதுகாக்கவும் விரும்பினார். அவர் 14 வயது முதலே சாதிமுறைகளை நம்புவதை விடுத்தார். பின்னர் ஒரு உயர்சாதியினைச் சேர்ந்த விதவைப் பெண்ணை மணம் புரிந்தார். 1891-ல் வெளியிடப்பட்ட வயது ஒப்பந்தச் சட்ட மசோதாவிற்கு ஆதரவாக தன் கருத்தை வெளியிட்டார். அவரது அரசியல் வாழ்விலும், மனசாட்சிக்கு விரோதமில்லாதவகையில் எந்த எல்லைக்கும் செல்லத் தயாராக இருந்தார்.
- சராசரி மாணவராக இருந்தாலும், பிபின் சந்திரபால் அவர்கள் படிப்பதில் ஆர்வம் கொண்டவராகவும், இலக்கியங்களைப் படைக்கும் திறன் பெற்றவராகவும் இருந்தார். அவரது 22 ஆம் வயதிலேயே பரிதாஷக் என்னும் வார இதழைத் துவங்கினார். அவரது இதழியல்துறை, கல்காத்தாவின் வங்காள மக்கள் கருத்து பத்திரிக்கையின் ஆசிரியர் குழுவில் ஒருவராக ஆக்கியது. மேலும் 1887 -1888-ல் லாகூரில் டிரிபயூன் (Tribune) இதழின் ஆசிரியராகவும், ஆங்கில வார இதழின் ஆசிரியராகவம் உரிமையாளராகவும் நியூ இந்தியாவினை 1901-ல் துவங்கியவுடன், 1906-ல் பந்தே மாதரம் என்னும் ஆங்கில நாளிதழைத் துவக்கி ஆசிரியராகவும் தொண்டாற்றினார். ஆனால், வந்தே மாதரம் இதழ் பிற்காலத்தில் அரசினால் தடை செய்யப்பட்டது.

- 1908 - 1911 ஆம் ஆண்டுகளில் அவர் நாடு கடத்தப்பட்டிருந்த போது லண்டன் சுவராஜ் என்னும் ஆங்கில வார இதழை வெளியிட்டார். 1912-ல் ஆங்கில மாத இதழான இந்து ரிவ்யூ (Hindu Review) மற்றும் வார இதழான டெமாக்ரட் (Democrat) ஆகியவற்றினை பதித்து வெளியிட்டார். மேலும் 1924 - 1925 ஆம் ஆண்டு காலத்தில் பெங்காலியையம் வெளியிட்டார். அத்துடன் மார்டன் ரிவ்யூ (Modern Review) அமிர்த பசார் பத்ரிகா (Amrita Bazzar Patrika) மற்றும் ஸ்டேட்ஸ்மேன் (Stateman) ஆகியவ்றிற்கு தொடர்ச்சியாக தன் பங்கினை அளித்துள்ளார்.
- தேசியவாதத்தின் பலம் பொருந்திய ஞானி (Mightiest Prophet of Nationalism) என்று அரபிந்தோ அவர்களால் அழைக்கப்பட்ட பிபின் அவாக்ள் சாத்வீக தடைகள், ஆங்கிலேயப் பொருட்களைப் புறக்கணித்தல், அந்நிய நாடுகளின் அனைத்து ஸ்தானபனங்களையம் நிறுத்தி வைத்தல் மற்றும் தேசிய கல்வியைப்பாதுகாத்தல் பேனர்ற அனைத்திற்காகவும் தீவிரமாக வாதிட்டார். நம்பிக்கை கொண்ட பேச்சாளர் என்ற முறையில் 1905 - 1907 சுதேசி இயக்க காலத்தில் பல்லாயிரக் கணக்கான ஆண்களையும், பெண்களையும் இவரது பேச்சு பாதித்தது. சுதந்திரம் அடைவதற்கு வெகு காலத்திற்கு முன்னர், அதை குறிக்கோளாகக் கொண்ட காங்கிரஸில் இவர் அதைத் தொடர்ந்து போதித்து வந்தார். மத்தியில் ஆட்சியை ஏற்படுத்துவதை எதிர்த்த அவர் இந்தியக் கூட்டாட்சிக் குடியரசை, அனைத்து மாகாணங்களும், மாவட்டங்களும், கிராமங்களும் தன்னாட்சி பெற்று சுதந்திரத்துடன் இருக்க வேண்டும் என அவர் விரும்பினார். அவரது நாட்டுப்பற்று மற்றும் சுதந்திரக் கருத்தானது தனிநபர் மற்றும் தேசிய சுதந்திரத்தை ஒருங்கிணைத்து வழங்குவதாகும்.
- உண்மையையும், சுதந்திரத்தையும் நேசிக்கும் பிபின் சந்திரா அவர்கள் தவறான நம்பிக்கைகளுக்கு கடுமையான எதிர்ப்பினைத் தெரிவிக்கக் கூடியவர். அவர் அரசியல், சமூக, தத்துவ மற்றும் மதம் சார்ந்து சிந்திக்கும் திறன்பெற்ற, இலக்கியத்துறையில் புகழ்பெற்றவராவார். தி நியூ எக்கனாமிக் மினான்ஸ் ஆஃப் இந்தியா (The New Economic Menace of India) என்னும் அவரது நூல், இந்தியத் தொழிலாளிகளின் வேலைசெய்யும் நேரத்தை குறைத்து ஊதியத்தை உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கை வைத்தது. ஏழைமக்கள் பற்றிய அவரது கவலையானது அஸ்ஸாமின் தேயிலைத் தோட்டத் தொழிலாளிகளின் நலத்திற்காக 19 ஆம் நூற்றாண்டின் கடைசி கால்பகுதியில் அவரைப் பேராட வைத்தது. ஆங்கிலேயர்களினால் ஏற்படும் பொருளாதார வளர்ச்சி தொடர்பாக அவர் எச்சரிக்கை விடுத்தார். 1932-ல் பிபின் சந்திரபால் அவர்கள் உயிர்நீத்தார்.

### 14. சப்பெக்கர் சகோதரர்கள் (பாலகிருஷ்ணா சப்பெக்கர் - 1973 - 1899, தாமோதர் சப்பெக்கர் - 1869 - 1898, வாசுதேவா சப்பெக்கத் - 1880 - 1899)

- மகாராஷ்டிராவைச் சேர்ந்த சப்பெக்கர் திலகரின் செல்வாக்கினால் கிளர்ச்சி நடவடிக்கைகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர். ஆங்கிலேயரை விரட்டி அடிக்க இந்திய இளைஞர்களுக்கு இராணுவப்பயிற்சி அளிப்பதற்காக "இந்துமதத்தின் தடைகளை ஒழிக்கும் சங்கம்" (Society for the Removal of Obstactes to the Hindu Religion) என்னும் அமைப்பினைத் துவங்கினர். 1897 ஆம் ஆண்டு ஜீன் மாதம் தாமோதர் மற்றும் பாலகிருஷ்ணன் இருவரும் இணைந்து திரு.ராண்ட் (Mr.Rand) அவர்களைத் தாக்கி கொலை செய்தனர். அவர் பூனாவின் ஆங்கிலேய பிளேக் கமிஷனர் (British plague Commisioner) ஆவார். அவர் 1897-ல் பிளேக் தொற்றிய போது பூனாவில் கட்டாயமாக மக்களை வெளியேற்ற வேண்டும் என்ற கொள்கை கொண்டிருந்தார். சகோதாரர்கள் இருவரும் கைது செய்யப்பட்டு விசாரணை முடிந்து மரணதண்டனை விதிக்கப்பட்டனர். 1898 ஏப்ரல் 18 ஆம் நாள் தாமோதரும், 1899 ஆம் 12 ஆம் நாள் பாலகிருஷ்ணாவும் தூக்கிலிடப்பட்டனர். மூன்றாவது சப்பெக்கர் சகோதரரான வாசுதேவா, கணேஷ் சங்கர் திராவிட் அவர்களைக் கொன்றார். கணேஷ், தாமோதர் மற்றும் பாலகிருஷ்ணா இருவரின் கைது நடவடிக்கைக்கு உதவியவராவார். வாசுதேவாவும் கைது செய்யப்பட்டு, விசாரிக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டார். 1899 மே 8 ஆம் நாள் தூக்கிலிடப்பட்டார்.

### 15. சந்திரசேகர் ஆசாத் (1906 - 1931)

- உத்திரபிரதேசத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற கிளர்ச்சிக்காரரான சந்திரசேகர் அவர்கள் ஆசாத் என்று அனைவராலும் அறியப்பட்டவராவார். சட்டமறுப்பு இயக்கத்தின் காலத்தில் கைது செய்யப்பட்ட போது

நீதிமன்றத்தால் தொடர்ந்து கேட்கப்பட்ட அனைத்து முறையும் தன் பெயர் ஆசாத் என்றே கூறினார். இதிலிருந்து மக்கள் அனைவராலும் ஆசாத் என்று அறியப்பட்டார். ஆங்கிலேய ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவர எதிர்பாராத தாக்குதல் அவசியம் என்று அவர் நம்பினார்.

❖ ஆசாத் அவர்கள் ஹிந்துஸ்தான் குடியசு அமைப்பின் (Hindustan Republican Accociation) உறுப்பினராகப் பணியாற்றினார். 1925-ல் காகோரி ஊடுருவில் பங்கு கொண்டதுடன் வங்கக் கிளர்ச்சிக்காரர்களுடன் நெருங்கியத் தொடர்பு கொண்டிருந்தார். ஹிந்துஸ்தான் சமூக குடியரசு ராணுவத்தின் (Hindustan Social Republican Army) தலைவராகவும், அதன் தரைப்படையின் தலைவராகவும் பொறுப்பேற்றார். இரண்டாவது லாகூர் ஊடுருவல், டெல்லி சதித்திட்டம், லாகூரில் சௌந்தர்களைக் கொலை செய்தது மற்றும் மத்திய சபையில் குண்டுகளை வீசியது போன்ற பல நடடிவக்கைகளில் ஈடுபட்டார். அலகாபாத்தில் ஆல்பிரட் பூங்காவில் காவலர்களுடன் சண்டையிட்ட பொழுது தன்னைத்தானே சுட்டுக்கொண்டு இறந்தார்.

### 16.சார்லஸ் ஃபிரீர் ஆன்ரூஸ் (1871 - 1940)

❖ ஆங்கிலேய சமூக சேவகர் மற்றும் மக்கள் நலன் விரும்பியான, சார்லஸ் அவர்கள் சமூக சேவைக்காகத் தன்னை அர்ப்பணித்து வாழ்வதை லட்சியமாகக் கொண்டிருந்தார். இங்கிலாந்தில் அவர் வாழ்ந்தாலும், மனிதநேய செயல்களை அதிகளவில் செய்துள்ளார். இந்தியாவிற்கு வந்தபின் டெல்லியின் செயிண்ட் ஜோசப் கல்லூரில் எட்டு ஆண்டுகளுக்குத் தன்னை இணைத்துக்கொண்டார். இக்காலத்தில் அந்நாட்களில் நடைபெற்ற பல சமூக சீர்திருத்த நடவடிக்கைகளிலும் முக்கியமான பல தேசியவாதிகளுடன் குறிப்பாக, தாதாபாய் நௌரோஜி, G.K.கோகலே, லஜபதிராய், T.B.சப்ரு மற்றும் ரபீந்திரநாத் தாகூர் போன்றோருடன் இணைந்து பங்கு கொண்டார். அப்போது அவர் தன்னை அந்நிய நாட்டு மனிதனாக அன்றி, இந்தியனாகவே உணர்ந்தார். அவரது முழுமனதான சுதந்திரப் போராட்டத்திற்கான ஒத்துழைப்பையும், ஆங்கிலேயர்களின் நியாயமல்லாத இனம் சார்ந்த அரசியல் கொள்கைகளை விமர்சிப்பதையும் தொடர்ந்தார். இந்தியத் தலைவர்களினால் துவங்கப்பட்ட அரசியல் மற்றும் சமூக இயக்கங்களிலும் பங்கு கொண்டார். மெட்ராஸ் பருத்தி நெசவாளிகள் 1918 மற்றும் 1919 ஆம் ஆண்டுகளில் சந்திரப்பூரின் தேயிலைத் தொழிலாளர்கள் நடத்திய போராட்டங்களின்போது தன் கவலையை வெளியிட்டார். அதேபோன்று ராஜஸ்தான் மற்றும் சிம்லாவிலும் மற்றும் தண்ட்லாவின் இரயில்வே தொழிலாளர்களின் உரிமைக்காக 1921 - 1922-ல் தலைமை தாங்கி உழைத்தார். 1925 மற்றும் 1927-ல் என்று இருமுறை ஐக்கிய வர்த்தக மாநாடுகளின் (Trade Union Congress) தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். தீண்டாமையை எதிர்த்து B.R.அம்பேத்கார் தொடங்கிய போராட்டங்களிலும் ஹரிஜன மக்களின் கோரிக்கைகளை உருவாக்கும் நடவடிக்கைகளிலும் இணைந்து பங்கு கொண்டார். (1933). இவரது எழை மக்களை உயர்த்தும் நோக்கம் கொண்ட நடவடிக்கைகள் காந்திஜியிடமிருந்து "தீனபந்து" (Deenabandhu) என்னும் அடைமொழியைப் பெற்றுத் தந்தது.

❖ உலகம் முழுவதும் பரவியுள்ள, குறிப்பாக ஆங்கில காலனிகளில் உள்ள இந்தியர்களின் உரிமைக்காக சார்லஸ் அவர்கள் வாதிட்டார். தென் ஆப்பிரிக்காவில் உள்ள இந்தியர்கள் ஆங்கில நிர்வாகத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை எதிர்த்துப் போரிட உதவி செய்வதற்காக அவர் பலமுறை அங்கு சென்று வந்துள்ளார். (தென் ஆப்பிரிக்காவின் ஃபோனிக்ஸ் (Phoenix) ஆசிரமத்தில் காந்திஜி அவர்களுடன் இவர் தங்கியிருந்தார்.) தென் ஆப்பிரிக்கா, கிழக்கு ஆப்பிரிக்கா, மேற்கிந்திய தீவுகள், பிஜி மற்றும் பல நாடுகளிலும் வாழும் இந்தியர்களின் நிலைபற்றியத் தகவல்களைச் சேகரித்து அங்குள்ள இந்தியத் தொழிலாளர்களின் பிரச்சினைகளை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தார். அவரது ஆங்கில ஆதிக்கத்தையும், சக்தியையும் பயன்படுத்தி இங்கிலாந்தில் காலனி ஆதிக்க சுரண்டலுக்கு எதிரான மக்களின் கருத்தினை அதிகரித்தார். காந்தி அவர்களை சிறையிலிருந்து விடுவிக்க, இங்கிலாந்து அரசுடனும் பேச்சுவார்த்தை நடத்தினார்.

❖ 1935-க்குப் பிறகு சேவைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். 1938-ல் தாம்பரத்தில் நடைபெற்ற உலக கிறிஸ்துவ மாநாட்டில் (Christian World Conference) கலந்து கொண்டார். காந்தியைப் பொறுத்தவரையில் அவர் உண்மையான நேசத்தை போதித்தார். போதகரான சார்லஸ் ஃபிரீர் ஆன்ரூஸ் அவர்கள் 1940 ஆம் ஆண்டு கல்கத்தாவில் காலமானார்.

**17. C.R.தாஸ் (1870 - 1925)**

❖ C.R.தாஸ் அவர்கள் கல்கத்தாவில் 1870 ஆம் ஆண்டு நவம்பர் 5 ஆம் நாள் பிறந்தார். அவர் லண்டனில் மாணவராக இருந்தபோதிலும், தாதாபாய் நௌரோஜி அவர்களின் தேர்தல் நடவடிக்கைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். 1908 ஆம் ஆண்டு அலிப்பூர் குண்டுவெடிப்பு சதித்திட்ட வழக்கில் அரபிந்தோ அவர்களை அறிவுப்பூர்வமாக பாதுகாத்தபோது மக்களால் அறியப்பட்டார். 1895-ல் மலன்சா, 1904-ல் மாலா, 1915-ல் அந்தார்யா, 1913-ல் கிஷோர்-கிஷோரி மற்றும் சாகர் சங்கீத் ஆகிய ஐந்து கவிதைப் புத்தகங்களையும் வெளியிட்டுள்ளார். அவர் மேலும் நாராயணா என்னும் வங்காள மாத இதழையும் துவங்கினார். அத்துடன் வைஷ்ணவ கீர்த்தனைகளையும் எழுதியுள்ளார். 1915-ல் வங்காள இலக்கிய மாநாட்டின் பூனா பகுதியின் இலக்கியப் பிரிவின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1923, அக்டோபரில் ஃபார்வர்ட் என்னும் (Forward) செய்தித்தாளையும் துவங்கினார்.

❖ C.R. தாஸ் அவர்கள் 1917-ல் வங்காள மாகாண மாநாட்டின் புவனிப்பூரின் பகுதியினைத் துவங்கி வைத்தார். 1918-ல் பம்பாயின் காங்கிரஸ் சிறப்புக் கூட்டத்திலும் பங்குக்கொண்டு மாண்டெகு-செம்ஸ்ஃபோர்டு அறிக்கை தொடர்பான அவரது எதிர்ப்பையும் தெரிவித்தார். 1919-ல் ஏற்பட்ட, ஜாலியன் வாலாபாய் படுகொலை தொடர்பாக அமைக்கப்பட்ட காங்கிரஸ் விசாரணைக்குழுவின் உறுப்பினராகவும் C.R. தாஸ் அவர்கள் இடம்பெற்றார். 1919 ஆம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டத்தை (Government of India Act) ஒப்புக்கொள்வதில் எதிர்ப்பினைத் தெரிவித்தார். அரசுக்கு எதிராக நடத்தப்படும் நிகழ்வுகளைக் கண்டறிய வங்காளத்தில் காங்கிரஸால் "சுப்ரிமோ" (Supremo)-வாக பணியில் அமர்த்தப்பட்டார். 1921இல் டிசம்பர் 11 ஆம் நாள் அவரது நடவடிக்கைகளுக்காக கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு பின்னர் 1922 ஜீலையில் விடுதலை செய்யப்பட்டார். அவர் அலகாபாத் காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்க்ப்பட்டிருந்தாலும் விசாரணைக் கைதியாக இருந்ததனால், பதவியை ஏற்க மறுப்பு தெரிவிக்கப்பட்டது. விடுதலை செய்யப்பட்ட பிறகு, காங்கிரஸின் கயா கூட்டத்தினை தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

❖ 1923-ல் C.R. தாஸ் அவர்கள் அனைத்து இந்திய சுயராஜ்ஜியக் கட்சியினைத் (All India Swaraj Party) துவங்கினார். இவர் தலைவராகவம், செயலாளராக மோதிலால் நேரு அவர்களும் இணைந்து செயல்பட்டனர். அக்கட்சியின் பெயர் காங்கிரஸ் கிலாபத் சுயராஜ்ஜியக் கட்சி என்றும், அதன் கொள்கையும் 1922, டிசம்பரில் நடைபெற்ற கயா மாநாட்டில் வெளியிடப்பட்டன. அமைதியான, நியாயமான முறையில் அனைவராலும் பெறப்படும் சுயராஜ்ஜியம் என்ற நோக்கத்தில் துவங்கப்பட்டது. விரைவில் சுயராஜ்ஜியக் கட்சியானது முக்கியமான எதிர்கட்சியாக உருவெடுத்ததுடன் இந்திய சட்டசபை மற்றும் சட்டமேலவைக்காக தேர்தல்களில் அனைத்து மாகாணங்களிலும் போட்டியிட்டது. அரசின் முக்கியமான திட்டங்களை உடைப்பதில், கிட்டத்தட்ட தீவிரவாதி என்று குறிப்பிடக்கூடிய அளவில் அவர் வெற்றி கண்டார். மகாத்மா காந்தி அவர்களுடன் C.R. தாஸ் அவர்களுக்கு கல்கத்தாவில் ஏற்பட்ட ஒப்பந்தம் மூலம் ராஜ்ஜியக் கட்சிக்கு காங்கிரஸால் அங்கீகாரம் அளிக்கப்பட்டதுடன், 1924-ல் அதன் குழுவில் இணையும் வாய்ப்பும் கிடைத்தது. 1925-ல் காங்கிரஸ் கான்பூர் கூட்டத்தில், சுயராஜ்ஜியக் கட்சி இந்திய தேசிய காங்கிரசுடன் இணைந்தது. 1924-ல் கல்கத்தா மாநகராட்சியின் முதல் மேயராக C.R. தாஸ் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

❖ C.R. தாஸ் அவர்கள் விவசாயிகளுக்கு வாதிட்டதுடன் ஐரோப்பிய முறையில் இந்தியாவினைத் தொழில்மயமாக்கதலைக் கடுமையாக எதிர்த்தார். இதனால் இவர் வர்த்தக மற்றும் வணிகத்தை எதிர்ப்பவர் என்று ஆகாது எதிராக, தொழிலாளர்களின் வளத்தினையும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான குறைந்த முதலீட்டினையம், அதன்மூலம் அவர்கள் பெரும் இலாபத்தினையும் அவர் உணர்ந்திருந்தார். 1923-ல் அனைத்திந்திய வர்த்தக அமைப்பு மாநாட்டினை (All India Trade Union Congress) லாகூரில் துவங்கிவைத்தபோது, தொழிற்சாலை சட்டவிதிகளையும், தொழிற்சாலை தொழிலாளர்களின் ஒருங்கிணைப்பையும், ஒத்துழைப்பு வழங்கும் தன் எண்ணத்தினை வெளியிட்டார். 1924-ல் அனைத்திந்திய வர்த்தக அமைப்பு மாநாட்டின் கல்கத்தா கூட்டத்தினையும் அவர் துவங்கி வைத்தார்.

❖ சுயராஜ்யத்திற்காக C.R. தாஸ் அவர்கள் தன்னை அர்ப்பணித்துக்கொண்டார். அவர் தன் தொழிலினை தியாகம் செய்து தன்னை முழுவதுமாக அந்நோக்கத்திற்கு ஒப்புக் கொடுத்தார். சுயராஜ்ஜியம் என்பது

புதிய உரிமையைப் பெறுவது அல்ல. இந்திய மக்கள் அனைவரும் செழிப்பான மேம்பட்ட வாழ்க்கையை நடத்துவதே ஆகும் என்று கருத்து தெரிவித்தார்.

- ❖ வழக்கறிஞரின் கணக்கீட்டு அறிவுடன் கவிஞரின் உணர்வுகளும் கூடிய அவரது அர்ப்பணிப்பு மிகுந்த செயல்பாடுகள் அவரது நண்பர்கள் மற்றும் உடனிருந்தவர்களால் அவரை தேசபந்து சித்தரஞ்சன் என்று அன்புடன் அழைக்கக் காரணமாகிறது. அவர் உண்மையான அரசியல் கருத்துக்களும், உயர்ந்த அரசியல் நிலையும் கொண்டு வாழ்ந்தவராவார்.
- ❖ தேசபந்து அவர்கள் தொடக்கத்தில் பிரம்ம சமரித்தைப் பின்பற்றி வந்தார். பின்னர், அவர் வைஷ்ணவராகி அனைத்திற்கும் கடவுளே காரணம் என்று கூறினார். பக்கிம் மற்றும் அரபிந்தோ போன்றது என்ற கொள்கை கொண்டிருந்தார். அவரது அனைத்து நடவடிக்கைகளும் இந்து-முஸ்லீம் ஒத்துழைப்பினை வேண்டியே இருந்ததுடன், வங்காளத்தில் பல்வேறு இனங்களின் கோரிக்கைகளை சரிசெய்ய தாஸ் சூத்திரத்தினையும் உருவாக்கினார். உலக அமைதிக்கு எதிராக ஏகாதிபத்தியம் விளைவித்த மிரட்டல்களை அவர் தொடக்கத்திலேயே உணர்ந்து கொண்டார். சுயமேம்பாட்டிற்காகவும், சுயமுழுமைக்காகவும் தேவையான தேசியவாதத்திற்கும் கண்மூடித்தனமான போராட்டத்திற்கும் அவர் வேறுபாடு கண்டறிந்தார். மன மற்றும் நன்னெறி கருத்துக்கள, வளர்ச்சியுடன் கூடிய சுயராஜ்ஜியம் கொண்ட அரசியல் சுதந்திரம் ஆகியவை கொண்ட அடிப்படை உரிமைகள் கொண்ட கருத்தினை அவர் நம்பினார். நவீன மற்றும் மேற்கத்திய அரசியல் கருத்துக்களையும் அவர் அறிந்திருந்தார்.
- ❖ பல்வேறுபட்ட கொள்கைகளை அறிந்திருந்த காரணத்தினால், கிராமப் பஞ்சாயத்து மற்றும் அரசு மறு உருவாக்கத்திற்கான 5 முக திட்டம் அவரால் வெளியிடப்பட்டது. அத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டவை, பழங்கால கிராம முறையினை அடிப்படையாகக் கொண்டு உள்ளாட்சி மையங்களை உருவாக்குதல், இந்த உள்ளாட்சி மையங்களை ஒருங்கிணைத்து பெரிய குழுவினை வளர்த்தல். அதே போனற குழுவினால் உருவான மாநிலத்தினை மேம்படுத்துதல், உள்ளாட்சிக் குழுக்களுக்கும், பெருங்குழுக்களுக்கும் தன்னாட்சி வழங்குதல் மற்றும் எஞ்சிய கட்டுப்பாட்டினை மத்திய அரசு வசம் வைத்திருந்தல்.
- ❖ தேசபந்து அவர்கள் பிர்ஜிலிங்கில் 1925 ஆம் ஆண்டு ஜீன் 16 ஆம் நாள் காலமானார். அவரது உடல் கல்கத்தாவிற்கு கொண்டுவரப்பட்டு லட்சக்கணக்கான மக்களாலும், காந்திஜி போன்ற தலைவர்களாலும் அஞ்சலி செலுத்தப்பட்டது. கவிஞரான, வழக்கறிஞரான, மிகப்பெரும் தலைவரான அவர் அதீத நம்பிக்கைகள் கொண்டிருந்தாலும், நாட்டிற்காகத் தன்னை அர்ப்பணிக்க எந்நேரத்திலும் தயாராக இருந்தார்.

## 18. தாதாபாய் நௌரோஜி (1825 - 1917)

- ❖ இந்தியாவின் முதியவர் மற்றும் இந்திய தேசியவாதத்தின் தந்தை என்னும் (Grand Oldman of India and Father of Indian Nationalism) புகழ்பெற்ற நௌரோஜி அவர்கள் விடாமுயற்சியும் தளரா மனமும் கொண்டு சுயராஜ்ஜியம் என்ற இலக்கு நோக்கி சுயராஜ்ஜியத்தை தன்நாட்டு மக்களுக்காக உருவாக்கப் பாடுபட்டவராவார். ஆங்கிலேயர்கள் இந்தியாவின் வளத்தைச் சுரண்டி இந்தியாவை ஏழை நாடாக மாற்றுகின்றன என்ற உண்மையை முதன்முதலில் வெளியிட்டவர் இவரே ஆவார். 1885-ல் இந்திய தேசிய காங்கிரஸ் தொடங்கவும், அதன் நடவடிக்கைகளுக்கும், தனது முடிவுக்காலம் வரை உதவி செய்துவந்தார்.
- ❖ தாதாபாய் நௌரோஜி அவர்கள பம்பாயில் கட்டாக் என்னுமிடத்தில் 1825 ஆம் ஆண்டு செப்டம்பர் 4 ஆம் நாள் பிறந்தார். அவரது கல்விக்காக தன் தாய் பட்ட கஷ்டங்களைப் பார்த்த காரணத்தினால் அவர் குழந்தைகளின் அடிப்படையான இலவசக் கல்வியை பெருமளவு ஆதரித்தார். நௌரோஜி அவர்கள் எல்ஃபின்ஸ்டோன் கல்வி நிறுவனத்தில் தன் கல்லூரிப்படிப்பை நல்ல முறையில் முடித்ததினால் இங்கிலாந்தில் துவங்கப்பட்ட இந்திய வணிக நிறுவனத்தன் (Indian Commercia Company) பங்குதாரரானார். இந்தியா ஆங்கிலேய ஆட்சியினால் படும் இன்னல்களை இங்கிலாந்திலேயே அவர் விளக்கிக் கூறினார். இலண்டன் இந்திய சமூகத்தினை (LondoIndian Society) உருவாக்குவதில் W.C. பானர்ஜியுடன் இணைந்து செயல்பட்டு தன் இலக்கு நோக்கிய பயணத்தில் சிறிது முன்னேறினார்.
- ❖ 1867-ல், குடிமைப்பணிக்காக இந்தியர்களை அழைத்தார். குடிமைப்பணிக்கான தேர்வுகள் இந்தியாவிலும் நடத்தப்பட வேண்டும் என்று ஆலோசனை வழங்கினார். அவரது "எவிடென்ஸ் ரிலேட்டிங் டு த எஃபீசியன்ஸி ஆஃப் நேட்டிவ் ஏஜென்ஸி இன் இந்தியா" (Evidence Relating to the Efficiency of Native Agency in India) உண்மையும் நம்பிக்கையும் கடமையும் சார்ந்த பணிகளில் நியமிக்கப்படும் போது

இந்தியர்கள் திறமையுடனும், ஒற்றுமையுடனும் செயல்படுவார்கள் என்று குறிப்பிட்டுள்ளார். குடிமைப்பணிகளில் இந்தியர்களை ஈடுபடுத்தும் அரசின் முடிவுகளுக்கு அவரது ஆதரவாளர்கள் ஆர்வம் காட்டினார். 1876-ல் "பாவர்டி இன் இண்டியா" (the Poverty of India) என்னும் நாளிதழையும், 1901-ல் அன்-பிரிட்டிஷ் ரூல் இன் இண்டியா (Un-British Rule in India) என்னும் நாளிதழையும் துவங்கி வெளியிட்டார். இந்தியாவின் வறுமைக்கு ஆங்கிலேய அரசே காரணம் என்று தெரிவித்தார். தொழில்மயமாதல் மற்றும் பொருளாதார சீர்திருத்தங்கள் தேவைப்பட காலத்தில் ஆங்கிலேயர்கள் இந்தியாவின் வளத்தைச் சுரண்டியதால், இந்நிலை ஏற்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

❖ இந்தியாவிற்கு நீதியை அளித்துப் பாதுகாக்க தாதாபாய் அவர்கள் இந்தியாவின் குரல் (The Voice of India) என்னும் மாத இதழை வெளியிட்டார். இந்திய நீதிபதிகளின் கீழ் ஆங்கிலேயரை விசாரிக்கம் உரிமையை இந்திய நீதிமன்றங்களுக்கு வழங்கும் இல்பர்ட் அல்லது குற்றவியல் நீதி இலாக்கா மசோதா (Libert of Criminal Jurisdiction Bill) அறிமுகம் செய்யப்பட்டதற்கு இவரும் ஒரு காரணம் ஆவார். 1885-ல் தாதாபாய் நௌரோஜி அவர்கள் பாம்பே மாகாண அமைப்பின் (Bombay Presidency Association) துணைத் தலைவரானார். ஆங்கிலேயர்களின் நாடாளுமன்றத்திற்கு தேர்வுசெய்யப்பட்ட முதல் இந்தியரும் தாதாபாய் நௌரோஜி அவர்களே ஆவார்.

### 19. தீனபந்து மித்ரா (1830 - 1873)

❖ தீனபந்து மித்ரா, வங்கமொழி எழுத்தாளராவார். நீலதர்பன் நாடகம் (1860-ல் வெளியிடப்பட்டது - Neal Darpan Natakam) என்னும் நூலினை எழுதி மக்களால் அறியப்பட்ட இவர், இண்டிகோ பயிரிடும் தொழிலாளர்களின் மீதான ஐரோப்பிய விளைவிப்போரின் கொள்கைகளை கடுமையாகக் கண்டித்தார். இதை விளக்கிய அவரது நாடக நூல் பிற்காலத்தில் மதுசுதன் தத் அவர்களால் ஆங்கிலத்தில் மொழிபெயர்ந்து வெளியிடப்பட்டது. இதனால், இப்பிரச்சினை தொடர்பான இயக்கம் தொடங்கியது.

### 20. கணேஷ் வாசுதியோ மாவலன்கர் (1888 - 1956)

❖ G.V. மாவலன்கர் அவர்கள் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்பதற்காக தனது வழக்கறிஞர் தொழிலை கைவிட்டார். அவர் 1921 ஆம் ஆண்டில் ஒத்துழையாமை இயக்கத்தில் இணைந்தார். குஜராத் வித்யாபீடத்தின் கௌரவ பேராசிரியராக இருந்த அவர் அனைத்து முக்கிய காங்கிரஸ் செயல்பாடுகளிலும் பங்கேற்றார். உப்பு சத்தியாகிரகம், சட்ட மறுப்பு இயக்கம் மற்றும் வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆகியவற்றில் இவரது பங்கின் காரணமாக கடும் கோபமடைந்த ஆங்கிலேயர்கள் இவரை சிறையிலடைத்தனர். சிறையிலும் அவர் நாட்டுக்காக உழைப்பதை கைவிடவில்லை. அங்கு அவர் குற்றவாளிகளை சீர்திருத்தும் பணியை தொடங்கினார். அவர் அகமதாபாத் நகராட்சியின் தலைவரானார். மேலும் 1937 ஆம் ஆண்டில் பம்பாய் சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அவர், அதன் சபாநாயகரானார். பின்னர் 1946 ஆம் ஆண்டில் அவர் மத்திய சட்டமன்றத்தின் தலைவரானார். சுதந்திர இந்தியாவில் பாராளுமன்ற கீழ் அவையின் சபாநாயகராக நியமிக்கப்பட்டார்.

### 21. கோபால் கணேஷ் அகார்கர் (1856 - 1895)

❖ மகாராஷ்டிராவில் ஒரு சித்பவன் பிராமணக் குடும்பத்தில் பிறந்த அகார்கர் ஒரு மிகச்சிறந்த தேசப்பற்றாளராகவும், சமூக சீர்திருத்தவாதியாகவும் விளங்கினார். 1880 ஆம் ஆண்டில் இவர் பூனாவில் முதுகலைப்பட்டம் பெற்றார். இவர் 1881 ஆம் ஆண்டில் திலகருடன் இணைந்து, மக்களிடையே தேசிய உணர்வுகளை தூண்டிவிடுவதற்காக மராத்தா மற்றும் கேசரி என்னும் பத்திரிக்கையை தொடங்கினார். 1888 ஆம் ஆண்டில் சுதாரக் என்னும் பத்திரிக்கையை சொந்தமாக தொடங்கிய அவர், அதன்மூலம் ஜாதிமுறை மற்றும் தீண்டாமையை கண்டித்தார். சிறந்த பகுத்தறிவுவாதியான அவர் கண்மூடித்தனமாக பழங்கால மரபினை பின்பற்றுவதையும், கடந்தகாலம் குறித்த தவறான புகழ்தலையும் விமர்சித்தார். பெர்கஸ்ஸன் கல்லூரியை நிறுவிய அகார்கர், 1892 ஆம் ஆண்டில் அதன் முதல்வரானார்.

### 22.கோபால் ஹரிதேஷ்முக் (லோககிதா வாதி) (1823 - 1892)

❖ ஒரு சிறந்த சமூக சீர்திருத்தவாதியான கோபால் ஹரிதேஷ்முக் அவர்கள், நியாயமான கோட்பாடுகள் மற்றும் நவீன, மனிதாபிமான மற்றும் சமயச் சார்பற்ற மதிப்பீடுகளின் அடிப்படையில் இந்திய சமுதாயம்

மறுச்சீரமைப்பு செய்யப்பட வேண்டுமென வாதிட்டார். இந்து பழமைவாதத்தினை எதிர்த்த அவர், சமூக மற்றும் சமய சமத்துவத்தினை ஆதரித்தார். சமூக சீர்திருத்தத்திற்கு சமயம் அனுமதிக்கவில்லையெனில் சமயத்தை மாற்றி விடுக என அவர் கூறினார். விதவை மறுமணத்தை ஊக்கப்படுத்துவதற்காக அகமதாபாத்தில் புணர்விவா மண்டலத்தை தேஷ்முக் நிறுவினார். லோகிதவாதி என்னும் மராத்தி மாத இதழின் ஆசிரியராக இருந்த அவர், இந்து பிரகாஷ் மற்றும் ஞான பிரகாஷ் என்னும் மராத்தி செய்தித்தாள்களை தொடங்குவதற்கு உதவி புரிந்தார்.

## 23. கோவிந்த பல்லாப் பந்த் (1889 - 1961)

- தற்போதைய உத்தரப்பிரதேச மாநிலத்திலிருந்து தோன்றிய G.B. பந்த் அவர்கள் அகில இந்திய காங்கிரஸ் குழுவின் உறுப்பினராகவும், உத்தப்பிரதேச கவுன்சிலின் எதிர்கட்சி தலைவராகவும் விளங்கினார். ஒரு சுயராஜ்ஜியவாதியான இவர் சைமன் குழுவிற்கு எதிராக போராட்டத்தில் முன்னணியில் இருந்தார். சட்டமறுப்பு இயக்கத்தில் அவரது ஈடுபாட்டின் காரணமாக அவர் 1930 ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் சிறையிலடைக்கப்பட்டார். இவர் உத்தரபிரதேசத்தில் வேளாண் அமைப்பின் சீர்திருத்தம் குறித்து பந்த் அறிக்கையினை தயாரித்தார். 1937 ஆம் ஆண்டில் அவரது மாகாணத்தில் முதல் காங்கிரஸ் அரசு அவரால் அமைக்கப்பட்டது. அவர் இந்தியாவிற்கு அதிகாரத்தினை மாற்றியளிப்பது குறித்து ஆங்கிலேயர்களுடன் தொடர்ந்து விவாதித்தார். உத்தரப்பிரதேசத்தின் முதல் முதலமைச்சரான இவர், தான் பதவி வகித்த எட்டு ஆண்டு காலத்தில் அதன் ஒட்டுமொத்த முன்னேற்றதத்திற்கு பெரும் பங்காற்றினார். உத்தரப்பிரதேசத்தில் ஜமீன்தாரி முறை ஒழிக்கப்பட்டது இக்காலக்கட்டத்தலான இவரது சாதனைகளுள் ஒன்றாகும். 1955 ஆம் ஆண்டில் G.B. பந்த் அவர்களுக்கு மத்திய அரசில் உள்துறை இலாகா வழங்கப்பட்டது. மாநிலங்களின் மறுச்சீரமைப்பில் இவர் பெரும் பங்கு வகித்தார். இவர் பாரத ரத்னா விருது பெற்றவர் ஆவார்.

## 24. ஹக்கீம் அஸ்மல் கான் (1868 - 1927)

- இந்து-முஸ்லீம் ஒற்றுமைக்காகவும், இந்திய சுதந்திரத்திற்காகவும் கடுமையாக போராடிய இப்பெரும் தலைவரின் மரணத்திற்கு பின்னர், "இந்து-முஸ்லீம் ஒற்றுமையே அவரது சுவாசக்காற்றாக இருந்தது" என மகாத்மாக காந்தி கூறினார். 1868இ பிப்ரவரி 12 ஆம் நாள் டெல்லியில் பிறந்த அஸ்மல் கான் தொழில் முறையில் ஒரு உலகப் புகழ் பெற்ற யுனானி மருத்துவராக விளங்கினார். மருத்துவ அறிவியலில் அவர் ஆற்றிய பங்களிப்பிற்காக அவருக்கு 1908 ஆம் ஆண்டில் ஹஃபீஸ்-உல்-முல்க் மற்றும் 1915 ஆம் ஆண்டில் கெய்ஸர்-இ-ஹிந்த் ஆகிய பட்டங்கள் வழங்கப்பட்டன. பூர்வீக மருத்துவ முறைகளை மேம்படுத்தும் பொருட்டு அவர் மேற்கொண்ட முயற்சிகளில் ஒன்றாக டெல்லியில் பல்லி மரான் என்னுமிடத்தில் இந்துஸ்தானி தவாகானா அமைக்கப்பட்டது. அவர் இலக்கியத்துறையிலும் தனது முத்திரையை பதித்தார். அவர் ஷைதா என்னும் புனைப் பெயரில் பெர்ஷிய மற்றும் உருது மொழி கவிதைகளை எழுதினார். மேலும் அவர் முஜல்லா-இ-திப்பியா என்னும் மாத இதழையும் தொடங்கினார்.
- சமூகத்தின் நிலை குறித்த தனது கருத்துக்களை அக்மல்-உல்-அக்பர் என்னும் உருது மொழி வரா இதழின் வழியாக வெளிப்படுத்த அவர் மேற்கொண்ட முயற்சிகளின் மூலம் அவரது அரசியல் வாழ்க்கை உருவெடுக்கத் தொடங்கியது. இந்திய சுதந்திரத்திற்கான அவரது அரசியல் போராட்டத்துடன் சமூக சீர்திருத்தமும் இணைந்தே இருந்தது. அவர் வகுப்புவாத ஒற்றுமையை காக்குமாறு இந்துக்கள் மற்றும் முஸ்லீம்களிடம் கோரிக்கை விடுத்தார். அவர் பக்தி மிக்க தேசப்பற்றாளர்கள் என்ற முறையில் தங்களது கடமைகளை நிறைவேற்றும் அதே நேரத்தில் இந்து உணர்வுகளுக்கும் மதிப்பளிக்குமாறு இந்திய முஸ்லீம்களிடம் கேட்டுக்கொண்டர். வகுப்புவாத கலவரங்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அமைதியை ஏற்படுத்துவதிலும், குற்றவாளிகளை அவர்களது தவறான செயல்களுக்காக கண்டிப்பதிலும் தனிப்பட்ட முறையில் ஈடுபாடு காட்டினார். இந்துக்களும், முஸ்லீம்களும் ஒன்றாக இணைந்து ஜாலியன் வாலாபாக் படுகொலையை எதிர்த்ததற்கும், அமைதியான முறையில் சுயராஜ்ஜியம் கோரியதற்கும் பின்னால் இவரது வலிமையான உந்துதல் இருந்தது.
- அஜ்மல் கான் அகில இந்திய முஸ்லீம் லீக்கின் தலைவராக மட்டுமன்றி, இந்து மகாசபாவினுடைய வரவேற்புக்குழுவின் முதல் முஸ்லீம் தலைவராகவும் இருந்தார். ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில், அவர் இந்திய தேசிய காங்கிரசின் தலைவர் மற்றும் கிலாபத் மாநாட்டின் தலைவர் என இரட்டை பதவிகளை

வகித்தார். காந்தி 1922 ஆம் ஆண்டில் தனது கைதுக்கு பிறகு சட்ட மறுப்பு விசாரணைக் குழுவின் தலைவராக ஹக்கீம் அஸ்மல் கானை நியமித்தார்.

- 1920 ஆம் ஆண்டில் அலிகாரில் ஹக்கிம் அஜ்மல்கான நிறுவிய தேசிய முஸ்லீம் பல்கலைக் கழகத்தைப் பற்றி குறிப்பிடாமல், அவரைப் பற்றிய குறிப்பு முழுமையடையாது. இது ஐந்து ஆண்டுகளுக்கு பிறகு டெல்லிக்கு மாற்றப்பட்டது. இவர் இப்பல்கலைக்கழகத்தின் முதல்வேந்தர் ஆவார். இப்பல்கலைக்கழகம் காந்தியின் சுதந்திரத் திட்டத்துடன் தொடர்புடைய தக்ளி ம்றறும் சார்காவின் பயன்பாட்டினை ஊக்கப்படுத்தியது.
- ஹர்பிலாஸ் சர்தா அவரது சமூக சீர்திருத்த செயல்பாடுகளுக்காக நினைவு கூறப்படுகின்றார். இவர், ரா ஜஸ்தானை சேர்ந்த ஒரு ஆரிய சமாஜ தலைவர் ஆவார். அவர் சமூக வரம்பிற்குள் சட்டமன்ற செயல்பாட்டினை தொடங்கச் செய்வதில் முன்னோடியாக திகழ்ந்தார். இவர் 1929 ஆம் ஆண்டு லாகூரில் நடைபெற்ற இந்திய தேசிய சமூக மாநாட்டிற்கு தலைமை வகித்தார். குழந்தைத் திருமண தடைச்சட்டம், 1930 நடைமுறைப்படுத்தப்பட்டதற்கு இவரது முயற்சிகளே முக்கிய காரணமாகும்.
- ஒரு ஆங்கிலேய இந்தியரான டெரோஸியோ இந்திய வாழ்க்கையில் மேற்கத்திய கருத்துக்களை அறிமுகப்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்தார். கல்கத்தாவின் இந்து கல்லூரியில் இலக்கியம் மற்றும் வரலாறு போதித்த அவர் நவீன இந்தியாவின் முதல் தேவியவாத கவிஞர் ஆவார். பிரெஞ்சுப் புரட்சியின் தாக்கத்தை பெற்ற அவர் சுதந்திரமாக மற்றும் நியாயமாக சிந்திக்கவும், அனைத்து அதிகாரத்தையும் கேள்வி கேட்கவும், அர்த்தமற்ற மரபுகள் மற்றும் சம்பிரதாயங்களை எதிர்க்கவும் தனது மாணவர்களுக்கு சொல்லிக் கொடுத்தார். மாணவர்களுக்கிடையேயான பரிமாற்றத்திற்காக அவர் அகாடமிக்க அஸோசியேஷன் என்னும் விவாதக்குழுவினை தொடங்கினார். அவர் ஹெ.ஸ்பெரஸ் மற்றும் தி கல்கத்தா லைப்ரரி கெஸட் என்னும் பத்திரிக்கைகளுக்கு ஆசிரியராகவும், இந்தியா கெஸட்டுடன் தொடர்புடையவராகவும் இருந்தார். அவர் பெண்களின் உரிமைகள் மற்றும் கல்வியை ஆதரித்தார். டெரோஸியர்கள் எனப்பட்ட அவரது ஆதரவாளர்கள் இளம் வங்காள இயக்கத்தினை தொடங்கி, ஆங்கிலேயர்களிடமிருந்து இந்தியர்களுக்கு பல உரிமைகளை கோரியதோடு, சமூகத்தின் தீமைகளை கண்டித்தனர். இவ்வியக்கத்தில் இரசிக்கிருஷ்ண மல்லிக், தாராசந்த சக்கர்வதி மற்றும் கிருஷ்ணமோகன் பானர்ஜி ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். தனது தீவிரத்தன்மையினால் டெரோஸியோ 1831 ஆம் ஆண்டு இந்து கல்லூரியிலிருந்து நீக்கப்பட்டார். இளம் வங்காள இயக்கமானது பிரபலமடையத் தவறினாலும், 1920 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் வங்காளத்திலும் ஒரு வகையான மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது. இதற்கான பெருமை டெரோஸியோ அவர்களையே சாரும்.

### 25. இந்துலால் யாஜ்னிக் (1892 - 1972)

- இந்துலால் யாஜ்னிக் அவர்கள் குஜராத்திலிருந்து தோன்றிய ஒரு சமூக சேவகர், சுதந்திர போராட்ட வீரர் மற்றும் பத்திரிக்கையாளர் ஆவார். அவர் சுயராட்சி இயக்கத்திலும், கைரா சத்தியாகிரகத்திலும் பங்கேற்றார். அவர் பழங்குடியின குழந்தைகளுக்கான பள்ளிகளை நிறுவியதோடு, அந்த்யஜ்சேவா மண்டலத்தின் உறுப்பினராக இருந்தார். அவர் குடியானவர்களின் நலனுக்காக உழைத்ததோடு, கிஸான் சபாவுடன் தன்னை தொடர்புப்படுத்திக் கொண்டார். 1942 ஆம் ஆண்டு அவர் அகில ஹிந்த் கிஸான் சபாவின் தலைவர் ஆனார். குஜராத் வித்யாபீடத்தின் நிறுவனரான இந்துலால் யாஜ்னிக் நவஜீவன் அனே சத்யா என்னும் மாத பத்திரிக்கையையும், நதன் குஜராத் என்னும் தினப் பத்திரிக்கையையும் வெளியிட்டார். சுதந்திரத்திற்கு பிறகு அவர் மகா குஜராத் ஜன்தா பரிஸத்தை நிறுவினார்.

### 26. ஈஸ்வர சந்திர வித்யாசாகர் (1820 - 1891)

- புகழ்பெற்ற அறிஞரும், எழுத்தாளருமான ஈஸ்வர சந்திர வித்யாசாகர் தனது வாழ்க்கை முழவதையும் சமூக நலவாழ்வுக்காக அர்ப்பணித்துக் கொண்டார். எனவே இன்னும் அவரது பெருமையை கூறும் வகையிலான பாடல்கள் இயற்றப்பட்டு பாடப்படுகின்றன. 1820 ஆம் ஆண்டு ஹீக்ளி மாவட்டத்தில் (மேற்கு வங்காளம்) பிறந்த வித்யாசாகர் தனது உறவினர்கள் மற்றும் நண்பர்களால் தனித்து விடப்பட்ட போதும், தனது காலம் மற்றும் செல்வம் முழுவதையும் சமூக சீர்திருத்த செயல்பாடுகளுக்காகவே செலவிட்டார். அவர் தனக்கென அமைத்துக் கொண்ட பல இலக்குகளை அடைவதற்கு, தனது

கருத்துக்களை தெளிவாக வெளிப்படுத்தும் வகையிலான அவரது மிகச்சிறந்த எழுத்துத்திறன் பெரும் உதவியாக இருந்தது.

- இந்திய சமூகத்தில் விதவை மறுமணம் மறுக்கப்பட்டிருப்பது குறித்து அவர் மிகவும் வருத்தமுற்றார். 1854 ஆம் ஆண்டு விதவை மறுமணம் குறித்து அவர் ஒரு சிறுநூல் வெளியிட்ட பிறகு, அவர் தனது நிலைப்பாட்டினை எதிர்க்கும் அறிஞர்களுக்கு தனது கண்ணோட்டத்தினை நியாயப்படுத்திக் காட்டினார். இறுதியாக 1856 ஆம் ஆண்டு விதவை மறுமணச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அவர் 1865 ஆம் ஆண்டு முதல் விதவை மறுமணத்தை நடத்தி வைத்தார். இதன் காரணமாக அவர் கடுமையாக விமர்சிக்கப்பட்டார். அவரது நண்பர்கள்கூட அவருக்கு ஆதரவளிக்க மறுத்தனர். எனினும் அவர் விதவை மறுமணங்களை நடத்தி வைப்பதை தொடர்ந்தார். உண்மையில் அவர் தனது சொந்த மகனுக்கே ஒரு விதவையை திருமணம் செய்து வைத்தார்.
- குழந்தை திருமணம் மற்றும் பலதாரப் பழக்கம் ஆகியவற்றிலிருந்து சமூகத்தை மீட்கவும் வித்யாசாகர் பாடுபட்டார். கல்வியின் மீதும் அவர் அதிக கவனம் செலுத்தினார். வங்காள மொழியின் படைப்பாளராக வித்யாசாகர் மதிக்கப்படுகின்றார். வித்யாசாகர் சமஸ்கிருத கல்லூரியில் கல்வி பெற்றவர் ஆவார். அவர் பள்ளி மாணவர்களின் பயன்பாட்டிற்காக பல படைப்புகளை வெளியிட்டார். சமஸ்கிருத இலக்கணம் பற்றிய பாடல் பஞ்சபிங்சதி (1846), உபகிரமானிகா ஆகியவையும், சாகுந்தலத்தின் வங்காள மொழிபெயர்ப்பும், சரிதபோலி, கோதமாலா, பர்னபோரி சாய் போன்ற நூல்களும் அவரது படைப்புகளில் அடங்கும். அவர் பெண் குழந்தைகளுக்கு கல்வி வழங்குவதற்காக பல பள்ளிகளை அமைத்தார். எனினும் ஒரு கல்லூரியையும் அவர் அமைத்தார். எனினும் அவை பின்னாளில் மூடப்பட்டன. மெட்ரோபாலிட்டன் இன்ஸ்டிடியூஷன் என்னும் ஒரு கல்லூரியையும் அவர் அமைத்தார்.

## 27. ஜெயபிரகாஷ் நாராயணன் (1902 - 1979)

- ஒரு மிகச் சிறந்த சுதந்திர போராட்ட வீரரும், சமூக சீர்திருத்தவாதியுமான ஜெயப்பிரகாஷ் நாராயணன் லோக் நாயக் என பிரபலமாக அழைக்கப்பட்டார். இவர் பீகாரில் உள்ள சீதாபதியாரா என்னுமிடத்தில் (பாட்னாவிற்கு அருகில்) 1902இ அக்டோபர் 11 ஆம் நாள் பிறந்தார். ஒரு மாணவர் என்ற முறையில் அவரது கல்வி வாழ்க்கை மிகவும் சிறப்பானதாக இருந்தது. தனது கிராமத்தில் தொடக்கக் கல்வி பயின்ற பிறகு அவர் பாட்னாவில் உயர்கல்வி கற்று தங்கப் பதக்கமும், மெரிட் ஸ்காலர்ஷிப்பும் வென்றார். இவர் 1921 ஆம் ஆண்டு ஒத்துழையாமை இயக்கத்தில், பங்கேற்பதற்காக தனது படிப்பினை தற்காலிகமாக கைவிட்டார். பின்னர் 1922 ஆம் ஆண்டு அமெரிக்காவிற்கு சென்ற இவர் ஓகியோ பல்கலைக்கழக்கத்தில் முதுகலைப்பட்டம் பெற்றார்.
- மார்க்சிஸ்ட் தத்துவத்தினால் நாராயணன் ஈர்க்கப்பட்டார். இந்தியாவிற்கு திரும்பிய பிறகு அவர் தொழிலாளர்களின் நலனுக்காக பாடுபட்டதோடு, கம்யூனிஸ்ட் பிரிவில் இணைந்தார். அவர் ஜமீன்தாரி முறை ஒழிக்கப்பட வேண்டும் என்றும், கனரக தொழிலகங்கள் தேசியமயமாகக்கப்பட வேண்டும் என்றும் வாதிட்டார். நாராயணனை இந்திய தேசிய காங்கிரஸில் இணையுமாறு நேரு தூண்டியதோடு, அவருக்கு தொழிலாளர்களின் பொறுப்பை வழங்கவும் முன்வந்தார். நேருவின் ஆலோசனையை நாராயணன் ஏற்றுக்கொண்டார். அதன் பிறகு சுதந்திரப் போராட்டத்தில் இவர் தீவிரமாக ஈடுபட்டார். இவர் சட்ட மறுப்பு இயக்கத்தில் பங்கேற்றதற்காக சிறையில் அடைக்கப்பட்டார். விடுவிக்கப்பட்ட பிறகு இவர் அகில இந்திய சமத்துவ கட்சியை உருவாக்கினார். 1942 ஆம் ஆண்டு வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்றதற்காக நாராயணன் மீண்டும் சிறையிலடைக்கப்பட்டார்.
- சுதந்திரத்திற்கு பின்னர் நாராயணன் தீவிர அரசியல் வாழ்க்கையிலிருந்து விலகினார். மாறாக சமூக சிர்திருத்திற்கான தனது போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபட்டதோடு, வினோபாபாவேவின் பூதான் இயக்கத்தில் இணைந்தார். 1975 ஆம் ஆண்டு தேசிய நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்டதை எதிர்த்து போராடுவதற்காக அவர் மீண்டும் அரசியலில் ஈடுபட்டார். அவர் நெருக்கடி நிலையை நீக்குவதற்கான இயக்கத்திற்கு ஆதரவளித்ததோடு, ஜனதாகட்சியின் உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகித்தார். இதனால் சிறையிலடைக்கப்பட்ட அவர் 1977 ஆம் ஆண்டில் விடுவிக்கப்பட்டார். 1977 ஆம் ஆண்டின் தேர்தலில் காங்கிரஸை ஜனதா கட்சி வென்றதிலிருந்து அவரது முயற்சிகள் பலனளிக்கத் தொடங்கின.

❖ இந்தியாவின் சமூக, அரசியல் மற்றும் பொருளாதார பிரச்சனைகள் குறித்து பல நூல்கள் எழுதிய பெருமை நாராயணனை சாரும். புகழ்பெற்ற இந்திய எழுத்தாளர்களின் பட்டியலில் இவரது பெயரும் இடம் பெற்றுள்ளது. இவர் தனது இறுதிய மூச்சினை 1979 ஆம் ஆண்டில் விட்டார்.

**28. ரவீந்திரநாத் தாகூர்**

❖ ரவீந்திரநாத் தாகூர் அவர்கள், இந்திய கலாச்சாரத்தின் அடையாளமாகத் திகழ்ந்தவர். அவர் ஒரு கவிஞர், தத்துவஞானி, இசையமைப்பாளர், எழுத்தாளர், மற்றும் ஒரு கல்வியாளரும் கூட.1913ல், அவரது கவிதைத் தொகுப்பான கீதாஞ்சலி என்ற படைப்புக்காக, நோபல் பரிசு வென்று,ஆசியாவின் முதல் நோபல் பரிசுக்கான வெற்றி வாகை சூட்டப்பட்டவர் என்ற பெருமையைத் தட்டிச் சென்றவர். ஆங்கிலேய அரசரான 5 ம் ஜார்ஜ் அவர்களால் வீரத்திருமகன் என்ற பட்டம் இவருக்கு வழங்கப்பட்டது.

❖ விஸ்வபாரதி பல்கலைக்கழகத்தை நிறுவிய ரவீந்திரநாத் தாகூர் அவர்கள், பிரபலமாக **குருதேவ்** என்றும் அழைக்கப்பட்டார். அவரது பிரபலமான இசைதட்டுகள் அனைத்தும் **ரவீந்திரசங்கீத்** என்ற பேரில் அழைக்கப்பட்டன. இவர் இயற்றிய ரவீந்திரசங்கீத் நியதியிலுள்ள இரண்டு பாடல்களான ”ஜன கண மன” மற்றும் ”அமர் சோனார்”, இந்தியா மற்றும் வங்காளத்தின் தேசிய கீதங்களாக உள்ளது. நம் நாட்டின் தேசிய கீதத்தை உருவாக்கிய அத்தகைய சிறப்பு வாய்ந்த கவிஞரான ரவீந்திரநாத் தாகூர் அவர்களைப் பற்றி மேலுமறிய தொடர்ந்துப் படிக்கவும்.

**பிறப்பு:**

❖ ரவீந்திரநாத் தாகூர் அவர்கள், கல்கத்தாவில் ஒரு பணக்கார பிராமண குடும்பத்தில் மே 7, 1861 அன்று பிறந்தார். அவர் தேவேந்திரநாத் மற்றும் சாரதா தேவி தம்பதியருக்கு ஒன்பதாவது மகன். அவரது தாத்தா த்வாரகனாத் தாகூர் ஒரு பணக்கார உரிமையாளராகவும், சமூக சீர்திருத்தவாதியாகவும் இருந்தார்.

**ஆரம்ப கால கல்வி**

❖ ரவீந்திரநாத் தாகூர் அவர்கள், ஓரியண்டல் செமினரி பள்ளியில் தனது ஆரம்பக் கல்வியைத் தொடங்கினார். ஆனால் அவருக்கு பாரம்பரிய கல்விமுறைப் பிடிக்காததால், பல ஆசிரியர்களின் கீழ் வீட்டிலேயேபடிக்கத் துவங்கினார். இவருக்கு பதினொரு வயதில் உபாநயன் என்ற பூணூல் சடங்கு நடத்தப்பட்டது. இதன் பின், 14 பிப்ரவரி 1873 ஆம் ஆண்டு இவரது தகப்பனாருடன் கல்கத்தாவை விட்டுப் புறப்பட்டு, பல மாதங்கள் இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். இவரது தந்தையாரின் சாந்திநிகேதன் தோட்டத்திற்கு சென்றனர். பின்னர், இமயமலைப் பகுதியான டல்ஹௌசியை அடையும் முன், அம்ரித்சாரிலும் தங்கினர். ரவீந்திரநாத் தாகூர் அவர்கள், பலருடைய சுயசரிதைகள்மற்றும் வரலாறுகளைக் கற்றதுடன், வீட்டிலேயே வானியல், அறிவியல், சமஸ்கிருதம் ஆகிய பாடங்களையும் படித்தார். காளிதாசரின் மரபார்ந்த கவிதைகளையும் ஆர்வத்துடன் கற்றார்.

**கவிதைகள் எழுதும் ஆர்வம்**

❖ 1874ல், ரவீந்திரநாத் தாகூர் அவர்களின் கவிதையான அபிலாஷ் (ஆசை), தட்டோபோதினி என்ற ஒரு பத்திரிகையில் அநாமதேயமாக வெளியிடப்பட்டது. அடுத்த ஆண்டில், அதாவது 1875ல், தாகூர் அவர்களின் தாயார் சாரதா தேவி காலமானார். கவிதைகளில் ரவீந்திரநாத்தாகூர் அவர்களின் முதல் கவிதைப் புத்தகமானக்ஷகபி கஹினி (ஒரு கவிஞர் கதை) 1878ல் வெளியிடப்பட்டது. அதே ஆண்டில், தாகூர் அவர்கள் சட்டம் பயில்வதற்காக அவரது மூத்த சகோதரரான சத்யந்திரநாத்துடன் கடல்வழியாக இங்கிலாந்து சென்றார். ஆனால், ஷேக்ஸ்ப்பியர் மற்றும் பிறரது ஆக்கங்களை ஆராய்வதிலேயே ஆர்வம் காட்டியதால், பட்டம் பெறாமலேயே 1880ல் வங்கத்திற்குத் திரும்பிவிட்டார்.பின்னர், ஒரு கவிஞராகவும், எழுத்தாளராகவும் தனது வாழ்க்கையைத் தொடங்கினார்.

**இல்லற வாழ்க்கை**

- ❖ ரவீந்திரநாத் தாகூர் அவர்கள், 1883 ஆம் ஆண்டில் டிசம்பர் 9ஆம் தேதி மிருனாலி தேவி ராய்சௌத்ரி என்ற 10 வயதுப் பெண்ணை மணந்தார். அவர்களுக்கு இரண்டு மகன்கள் மற்றும் மூன்று மகள்கள்என ஐந்து குழந்தைகள் பிறந்தனர். ஆனால், இரண்டு குழந்தைகள் வாலிபப் பருவம் அடையுமுன்பே இறந்து விட்டனர்.

**ரவீந்திரநாத் தாகூரின் படைப்புகள்**

- ❖ ரவீந்திரநாத் தாகூர் அவர்கள், 1884ல், கோரி-ஓ-கமல் (ஷார்ப் மற்றும் பிளாட்) என்ற கவிதைத் தொகுப்பை எழுதினார். மேலும், அவர் ராஜா-ஓ-ராணி (கிங் மற்றும் ராணி) மற்றும் விசர்ஜன் (தியாகம்) என்ற நாடகங்களையும் எழுதினார்.
- ❖ 1890 ஆம் ஆண்டில், ரவீந்திரநாத் தாகூர் அவர்கள் தனது குடும்ப எஸ்டேட்டைப் பார்த்துக்கொள்ள சிலைதஹாவிற்கு (இப்போது வங்காளத்தில் உள்ளது) சென்றார். 1893 முதல் 1900 வரை, தாகூர் அவர்கள் ஏழு கவிதைத் தொகுதிகளான சொனார் தொரி (கோல்டன் படகு) மற்றும் கனிகா போன்றவற்றை எழுதியுள்ளார்.
- ❖ 1901ல், ரவீந்திரநாத் தாகூர் அவர்கள், பங்கதர்ஷன் என்ற இதழின் ஆசிரியரானார். பழைய இந்திய ஆசிரம முறை அடிப்படையில், அவர் சாந்திநிகேதனில் போல்பூர் பிராமசார்யாஸ்ரமம் என்றொரு பள்ளியைத் துவங்கினார்.
- ❖ 1902 ஆம் ஆண்டில், அவரது மனைவி மிருணாளினி இறந்தார். பின்னர், தாகூர் அவர்கள் இயற்றிய கவிதைகள் தொகுப்பான ஸ்மரன் (மெமோரியம் அங்குலம்), என்ற படைப்பை அவரது மனைவிக்காக அர்ப்பணித்தார்.

**வங்கப்பிரிவினையில் தாகூரின் பங்கு**

- ❖ 1905ல், கர்சன் பிரபு, வங்கத்தை இரண்டு பகுதிகளாக பிரிக்க முடிவு செய்தார். இந்த முடிவை எதிர்த்து ரவீந்திரநாத் தாகூர் அவர்கள், கடுமையாகப் போராடினார். தாகூர் அவர்கள், பல தேசிய பாடல்களை எழுதி, பல்வேறு எதிர்ப்பு கூட்டங்களிலும் கலந்து கொண்டார். அவர் பிரிக்கப்படாத வங்காள அடிப்படை ஒற்றுமையை குறிக்கும் விதமாக ராக்கிபந்தன் விழாவை வங்கத்தில் அறிமுகப்படுத்தினார்.

**தாகூரின் கீதாஞ்சலியும், நோபல் பரிசும்**

- ❖ 1909 ஆம் ஆண்டு ரவீந்திரநாத் தாகூர் அவர்கள், கீதாஞ்சலியை எழுதத் தொடங்கினார். 1912 ஆம் ஆண்டில், இரண்டாவது முறையாக ஐரோப்பா சென்றார். இந்த லண்டன் பயணத்தின் போது, அவர் கீதாஞ்சலியில் இருந்து சில கவிதைகள் மற்றும் பாடல்களை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்த்தார். இவர் லண்டனில் மதிக்கத்தக்க ஆங்கிலேய ஓவியரான வில்லியம் என்பவரை சந்தித்தார். அவரது கவிதைகளால் பெரிதும் ஈர்க்கப்பட்ட ரோத்தென்ஸ்டீன் அவர்கள், அவரது கவிதைகளைப் பிரதிகள் எடுத்து, ஈட்ஸ் மற்றும் பிற ஆங்கிலக் கவிஞர்களுக்கும் கொடுத்தார். ஈட்ஸ் அவர்களும் பெரிதும் ஈர்க்கப்பட்டார். செப்டம்பர் 1912ல், லண்டனில் உள்ள இந்திய சமூகத்தின் ஒரு வரையறுக்கப்பட்ட பதிப்பில் கீதாஞ்சலி வெளியிடப்பட்ட போது, தாகூர் அவர்கள், அதற்கு முன்னுரை எழுதினார்.
- ❖ 1913 ஆம் ஆண்டில், ரவீந்திரநாத் தாகூரின் கீதாஞ்சலிக்கு, இலக்கியத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. 1915 ஆம் ஆண்டில், தாகூர் அவர்களுக்கு, ஆங்கிலேய ஜார்ஜ் மன்னர், **நைட்வுட்** என்னும் பட்டம் வழங்கினார்.

**சுதந்திர போராட்டத்தில் தாகூரின் பங்கு**

- ❖ 1919ல் நடந்த ஜாலியன்வாலாபாக் படுகொலையைத் தொடர்ந்து, தாகூர் அவர்கள் ஆங்கிலேய ஜார்ஜ் மன்னர் அவர்கள் வழங்கிய **நைட்வுட்** என்னும் பட்டத்தைத் துறந்தார். அவர் காந்திஜியின் ஒரு ஆதரவாளராக இருந்தாலும், அரசியலில் இருந்து விலகியே இருந்தார். அவர் கொள்கை என்ற நோக்கில் இருந்து தேசியவாதம் மற்றும் இராணுவவாதத்தை எதிர்த்து, அதற்கு பதிலாக ஆன்மீக

மதிப்புகள் மற்றும் பண்பாடு, பன்முகத்தன்மை மற்றும் சகிப்புத்தன்மைகள் கொண்ட ஒரு புதிய உலக கலாச்சாரத்தை உருவாக்க எண்ணினார். அவரது கருத்துக்களுக்கு ஒரு கருத்தியல் ஆதரவு பெறாதாதன் காரணமாக, அவருடைய சிந்தனைகளில் இருந்து ஓய்வு பெற்று ஒதுங்கியே இருந்தார். 1916 முதல் 1934 வரை, அவர் பெருமளவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.

**தாகூரின் பரந்த மனப்பான்மையும், கூர்ந்த அறிவுத் திறமையும்**

- 1921 ஆம் ஆண்டு ரவீந்திரநாத் தாகூர் அவர்கள், விஸ்வபாரதி பல்கலைக்கழகத்தை நிறுவினார். அவர் தனது புத்தகங்களுக்காகக் கிடைத்த நோபல் பரிசின் மூலமாகக் கிடைத்த உரிமைத்தொகை அனைத்தையும் இந்த பல்கலைக்கழகத்திற்காக கொடுத்தார்.
- தாகூர் அவர்கள், ஒரு படைப்பாக்க மேதையாக மட்டுமல்லாமல், மேற்கத்திய கலாச்சாரத்தையும், குறிப்பாக மேற்கத்திய கவிதைகள் மற்றும் அறிவியலில் மிகவும் அறிவுடையவராகவும் திகழ்ந்தார். தற்கால நவீன நியூட்டனின் இயற்பியலில் தாகூர் அவர்களுக்கு ஆழ்ந்த சிந்தனை இருந்ததால், புதிதாக வளர்ந்து வரும் குவாண்டம் மெக்கானிக்ஸின் கொள்கைகள் மற்றும் குழப்பங்களின் பேரில் ஆல்பர்ட் ஐன்ஸ்டீனுடன் 1930ல் நடந்த ஒரு விவாதத்தில், அவரால் தனது கருத்துகளை முன் வைக்க முடிந்தது. அவரது சமகாலத்தவர்களான ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் மற்றும் ஹெச்.ஜி.வெல்ஸ் போன்றோருடன் நடந்த கூட்டங்கள் மற்றும் நாடா பதிவு உரையாடல்கள் மூலமாக அவரது திறமைகளை சங்கிரகிக்க முடிந்தது. 1940ல், சாந்திநிகேதனிலுள்ள ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் ஒரு சிறப்பு விழா ஏற்பாடு செய்து, ரவீந்திரநாத் தாகூர் அவர்களுக்கு இலக்கிய முனைவர் பட்டம் வழங்கப்பட்டது.

**இறப்பு**

- நீண்ட காலம் நோய்வாய்பட்டகுருதேவ் ரவீந்திரநாத் தாகூர் அவர்கள், கல்கத்தாவிலுள்ள தனது மூதாதையர் வீட்டில் ஆகஸ்ட் 7, 1941 அன்று காலமானார்.

**29. பகத்சிங் (கி.பி.1907 - 1931)**

- பகத்சிங் கி.பி.1907 செப்டம்பர் 27 ஆம் நாள் பஞ்சாப் லியால்பூர் மாவட்டத்தில் பிறந்தார். இளம் வயதிலிருந்தே இவர் சிறந்த படிப்பாளியாகவும், தேர்ந்த போராளியாகவும் திகழ்ந்தார். லாகூரில் இருந்து துவாரகதாஸ் நூலகத்தில் ரஷ்யா, அயர்லாந்து, இத்தாலி போன்ற நாடுகளில் நிகழ்ந்த புரட்சி இயக்கங்கள் புரட்சித்தலைவர்கள் பற்றி படித்துத் தெரிந்துகொண்டார்.
- காரல் மார்க்ஸ்ன் சோஷலிச சித்தாந்தம் பகத்சிங்கைப் பெரிதும் கவர்ந்தது. இவர் பல கற்றல் கூடங்களை ஏற்படுத்தி அவற்றின்மூலம் இளைஞர்களிடையே புரட்சிக் கருத்துக்களைப் பரப்பினார். பகத்சிங் கைது செய்யப்பட்டு லாகூர் சிறையில் அடைக்கப்பட்டபோது சிறைக்கூடத்தைத் திறந்தவெளிப் பல்கலைக்கழகமாக மாற்றினர்.
- சக கைதிகளுக்குப் புரட்சிக்கான மூலப்பொருள் கருத்துக்களே என்பதை எடுத்துரைத்தார். புரட்சி என்ற வாள் கருத்துக்கள் என்ற சாணைக்கல்லில் கூர்தீட்டப்படுகிறது என்று லாகூர் உயர்நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையின்போது கூறினார். இவரது சக புரட்சியாளர்கள் அனைவரும் கற்றறிவாளர்களாக இருந்தனர்.
- புரட்சிமூலம் இந்தியா விடுதலைப்பெற வேண்டும் என்பதே பகத்சிங்கின் நோக்கமாக இருந்தது. அந்த நோக்கத்தோடே அவர் **பஞ்சாப் நவஜீவன் பாரத சபை** என்ற அமைப்பை உருவாக்கினார். **மாணவர் சங்கம்** ஒன்றையும் ஏற்படுத்தினார்.
- வகுப்புவாத சங்கங்களைச் சேர்ந்தோர் இந்த அமைப்புகளில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. காலனி ஆதிக்கத்தைப் போன்றே வகுப்புவாத ஆதிக்கமும் அபாயகரமானது என்று எச்சரித்தார். மனிதனை மனிதனாக மதிக்க வேண்டுமேயன்றி இந்துவாகவோ, முஸ்லீமாகவோ, சீக்கியராகவோ பார்க்கக்கூடாது என்ற அவரது கருத்து நினைவுகூறத்தக்கது.
- பகத்சிங் **நான் ஏன் ஒரு நாத்திகனானேன்** என்ற கட்டுரையில் சமயப்பொறையுடைமை பற்றிக் கூறியுள்ளார். சமய நம்பிக்கை ஒருவரது தனி உரிமை. ஆனால் மக்கள் மதம், மூடநம்பிக்கை, புராணம்

என்ற பெயரால் **மன அடிமைகள்** ஆகிவிடக்கூடாது என்பதை அடிக்கோடிட்டுக் காட்டினர். புரட்சியாளர்களுக்கு நாத்திகமும், பொருண்மைவாதமும் ஊன்றுகோல்களாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

**ககோரி சதி வழக்கு (கி.பி.1925)**

- **இந்துஸ்தான் குடியரசு சங்கத்தை** ஏற்படுத்தியபின் ஆயுதப் புரட்சி பற்றிய பிரச்சாரம் செய்யவும், புரட்சி வீரர்களைத் தெரிவு செய்து பயிற்சி அளிக்கவும், ஆயுதங்களைப் பெறவும் திட்டமிட்டனர். இதற்கு ஏராளமானப் பணம் தேவைப்பட்டது.
- **ராம் பிரசாத் பிஸ்மில்லின்** யோசனைப்படி புகைவண்டியில் கொண்டு செல்லப்பட்ட தபால் கருவூலத்தைக் கொள்ளையடிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. அதன்படி கி.பி.1925 ஆகஸ்ட் 9-ஆம் நாள் **லக்னோ சஹரான்பூருக்கு இடையேயிருந்த ககோரி** இரயில் நிலையத்தில் புகைவண்டியை நிறுத்தி கைத்துப்பாக்கியுடன் வண்டிக்குள் நுழைந்து கருவூலத்தைக் கொள்ளையடித்துச் சென்றனர். இத்துணிகரக் கொள்ளை ஆட்சியாளர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.
- அரசாங்கம் ககோரி கொள்ளையர்களைப் பிடிக்கக் காவல்துறையையும், துப்பறியும் துறையையும் முடுக்கிவிட்டது. 40 புரட்சியாளர்களைக் கைது செய்து அவர்கள்மீது சதிவழக்கு தொடரப்பட்டது. 250 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர்.
- கி.பி.1927 ஏப்ரல் 7 ஆம் நாள் வழக்கு முடிந்தது. **அஷ்பாபுல்லா, பண்டிட்ராம்பிரசாத் பிஸ்மில், ரோஷன் சிங், ராஜேந்திர லாகிரி** ஆகியோருக்குத் தூக்கு தண்டனை கொடுக்கப்பட்டது. **மன்மத்நாத் குப்தா** போன்றோருக்கு 14 ஆண்டு கால சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. **ராஜேந்திரநாத்** வாழ்நாள் முழுவதும் நாடு கடத்தப்பட்டார். மேலும் 4 பேருக்கு வாழ்நாள் தண்டனை கொடுக்கப்பட்டு அந்தமானுக்கு அனுப்பப்பட்டனர்.

**இந்துஸ்தான சோஷலிஸ்டு குடியரசு சங்கம் (HSRA) (கி.பி.1928)**

- ககோரி சதிவழக்கு வடஇந்தியாவில் புரட்சிப் பயங்கரவாத இயக்கத்துக்குப் பெரும் பின்னடைவு ஏற்படுத்தியது. குடியரசு சங்கம் இருந்த இடம் தெரியாமல் போயிற்று. எனினும் ஐக்கிய மாகாணத்திலும், பஞ்சாபிலும் பல இளைஞர்கள் புரட்சி இயக்கத்தால் ஈர்க்கப்பட்டிருந்தனர்.
- ஐக்கிய மகாணத்தில் எபஜாய் குமார் சின்கா, சிவவர்மா, ஜெய்தேவ் கபூர் போன்றவர்கள் வன்முறைக் கிளர்ச்சியில் தீவிர பற்று கொண்டிருந்தனர்.
- பஞ்சாபில் பகத்சிங், சுகதேவ், பகவதி சரன் ஓரா போன்ற இளைஞர்கள் ஆயுதப் பரட்சிக்குத் தயாராக இருந்தனர். அத்தகைய இளைஞர்கள் சோஷலிச சித்தாந்தத்தால் பெரிதும் கவரப்பட்டிருந்தனர். இப்புரட்சியாளர்கள் ககோரி சதி வழக்கிலிருந்து தப்பிச்சென்று தலைமறைவாய் இருந்து சந்திரசேகர் ஆசாத்தின் தலைமையில் ஒன்று சேர்ந்தனர்.
- இவர்கள் அனைவரும் கி.பி.1928 செப்டம்பர் 9, 10 ஆம் தேதிகளில் பெரோஸ்ஷா கோட்லா மைதானத்தில் ஒன்றுகூடி கூட்டுத்தலைமையின் கீழ் சோஷலிசத்தை இலட்சியமாகக் கொண்டு இந்துஸ்தான் குடியரசு சங்கத்தைப் புதுபித்து மறுசீரமைத்து இந்துஸ்தான் சோஷலிஸ்டு சங்கம் **(Hindustan Socialist Republican Association)** அமைத்தனர்.
- இச்சங்கத்தைப் புரட்சி இராணுவமாகக் கருதிச் செயல்பட்டனர். இப்புரட்சியாளர்கள் தனி மனிதர்களைக் கொலை செய்வதைத் தவிர்த்து சோஷலிஸ்டுக் குடியரசை ஏற்படுத்துவதில் குறியாக இருந்தனர். சாதியைத் துறந்தவர்கள் தான் புதிதாகத் துவங்கப்பட்ட இந்த சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.
- ஜெயகோபால் போன்றோர் இந்துஸ்தான் சோஷலிஸ்டு குடியரசு சங்கத்தில் பிரதானமாக பங்கேற்றனர். இந்தியாவில் புரட்சி இயக்கம் சூடு பிடிக்கத் துவங்கியது.

**சான்டர்ஸ் கொலை (கி.பி.1928)**

- சைமன் புறக்கணிப்பு இயக்கம் புரட்சியாளர்களுக்கு நல்ல வாய்ப்பைக் கொடுத்தது. அவர்கள் விடுதலைப் போராட்டத்தில் புரட்சிப் பரிமாணத்தைக் கொடுத்தனர்.

- சைமன் கமிஷனுக்கு எதிரான கருப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தின் போது, கி.பி.1928 அக்டோபர் 30 ஆம் நாள் பஞ்சாப் லாகூரில் லாலா லஜபதிராயின் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.
- போலீஸ் அதிகாரி தடையை மீறிய லாலாலஜபதிராயைத் தலையிலும், மார்பிலும் லத்தியால் பலமாகத்தாக்கினர். படுகாயமுற்ற **பஞ்சாப் சிங்கம்** என்று அழைக்கப்பட்ட **லஜபதிராய்** அன்று மாலையே நடைபெற்ற பிரமாண்டமான பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசினார். தன் குடிமக்களையே காட்டுத்தனமாகத் தாக்கும் அரசாங்கத்தை நாகரீகமான அரசாங்கம் என்று கூறமுடியாது. அத்தகைய அரசாங்கம் நீண்டநாள் நீடிக்காது என்று எச்சரித்தார். காயமுற்ற லாலாலஜபதிராய் கி.பி.1928 நவம்பர் 17 ஆம் நாள் உயிர்நீத்தார்.
- **சந்திரசேகர் ஆசாத், பகத்சிங், ராஜகுரு** ஆகியோர் தடியடித் தாக்குதலுக்கு உத்தரவு கொடுத்த உயர் போலீஸ் அதிகாரி **ஜெ.ஏ.ஸ்காட்டைக்** கொல்லத் திட்டமிட்டனர். லாகூரில் ஸ்காட் தப்பிவிட போலீஸ் துறை மேலாளர் **ஜே.பி.சாண்டர்ஸ்** கொல்லப்பட்டார். (கி.பி.1928 டிசம்பர்) லாகூர் சதிவழக்கில் கொலையாளிகளுக்குத் தண்டனை வழங்கப்பட்டது.

**சட்டமன்றத்தில் வெடிகுண்டு வீச்சு (கி.பி.1929)**

- **இந்துஸ்தான் சோஷலிஸ்டு குடியரசு சங்கத்தினர்** மக்கள் விரோத மற்றும் அநீதியின் சின்னமாகத் திகழ்ந்த சட்டமன்றத்தை வெடிகுண்டுவீசித் தாக்க திட்டமிட்டனர்.
- கி.பி.1929 ஏப்ரல் 8 ஆம் நாள் **பொது பாதுகாப்பு மசோதா, வர்த்தக வழக்குகள் மசோதா** ஆகிய இரு அடக்குமுறை மசோதாக்களும் மத்திய சட்டமன்றத்தில் விவாதத்துக்கு வர இருந்தன. அரசாங்கம், மக்கள் பிரதிநிதிகளின் ஒருமித்த எதிர்ப்பையும் மீறி அந்த மசோதாக்களை நிறைவேற்றத் தீர்மானித்தது. அதை தெரிந்து **பகத்சிங்கும், பி.கே.தத்தும்** சட்டமன்றத்துக்குள் நுழைந்து குண்டுகளை வீசினர்.
- **செவிடர்களும் கேட்க வேண்டும்** என்பதற்காகவே குண்டு வீசப்பட்டதாகத் துண்டுப் பிரசுரங்கள் தெரிவித்தன. **பகத்சிங்கும், பி.கே.தத்தும்** கைது செய்யப்பட்டனர்.

**சட்டமன்ற வெடிகுண்டு வெடிப்பு வழக்கு (கி.பி.1929)**

- கி.பி.1929 ஜீன் 4 ஆம் நாள் **பகத்சிங், தத்தா சுகதேவ், ராஜகுரு, பந்துகேஷ்வர்** உள்ளிட்ட பல புரட்சியாளர்கள் மீது சதிக்குற்றம் சாட்டப்பட்டு வழக்கு விசாரிக்கப்பட்டது.
- வழக்கு நடைபெற்ற ஒவ்வொரு நாளும் இவர்கள் **இன்குலாப் ஜிந்தாபாத்** அல்லது **ஏகாதிபத்தியம் ஒழிக** என்று முழக்கமிட்டவாறு நீதிமன்றத்துக்குள் நுழைந்தனர்.
- வழக்கு விசாரணை விவரங்களும், பகத்சிங் விசாரணையை எதிர்கொண்டதையும் பத்திரிக்கைகள் விரிவாக வெளியிட்டன. இவர்கள் வாக்குமூலத்தை வாய்ப்பாகக் கொண்டு இந்துஸ்தான் சோஷலிஸ்டு குடியரசு சங்கத்தின் நோக்கத்தையும், நடவடிக்கைகளைப் பற்றியும் பேசினர். இப்புரட்சியாளர்கள் நீதிமன்றத்தில் கொடுத்த விரிவான வாக்குமூலம் மக்களிடையே புரட்சிக் கனலைத் தூண்டிவிட்டது.
- சட்டமன்ற வெடிகுண்டு வழக்கு சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டோர் அனைவரும் கொடூரமாக நடத்தப்பட்டனர். புரட்சியாளர்கள் அரசியல் கைதிகளாக நடத்தப்பட வேண்டுமேயன்றிக் கொலைக் குற்றவாளிகளாக கருதப்படக்கூடாது என்று கூறி **யதீந்திரநாத் தாஸ்** சாகும்வரை உண்ணாவிரதம் துவங்கினார் (கி.பி.1930 செப்டம்பர் 13). உண்ணாவிரதம் ஆரம்பித்து 64 ஆம் நாள் உயிர்த்தியாகம் செய்தார். அவரது தியாகம் மக்களின் உணர்ச்சியைத் தூண்டிவிட்டது.

**லாகூர் சதி வழக்குக் தீர்ப்பு (கி.பி.1931)**

- சைமன் கமிஷன் புறக்கணிப்புப் போராட்டத்தின்போது லாகூரில் லாலாலஜபதிராய் சான்டர்ஸ் என்ற போலீஸ் அதிகாரியால் தாக்கப்பட்டு இறந்ததற்குப் பழிதீர்க்க பகத்சிங்கும், அவரது கூட்டாளிகளும் சதிசெய்து சான்டர்ஸைக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு வழக்கு நடைபெற்றது. அந்த வழக்கின் தீர்ப்பின்படி **கி.பி.1931 மார்ச் 23** ஆம் நாள் **பகத்சிங், ராஜகுரு, சுகதேவ்** ஆகியோர் குற்றவாளிகள் என்று குற்றம் சாட்டப்பட்டு லாகூர் மத்திய சிறையில் தூக்கிலிடப்பட்டனர்.

### 30. ஸ்ரீ அரவிந்தர் கோஷ்

❖ அரவிந்த கோஷ் ஒரு சுதந்திரப் போராட்ட வீரர், கவிஞர், யோகி, தத்துவஞானி எனப் பன்முகம் கொண்ட மானுட அறிஞர் ஆவார். விடுதலைப் போராட்ட வீரராக தன்னுடைய வாழ்க்கையை தொடங்கி, ஆன்மீகவாதியாக வாழ்ந்த அரவிந்த கோஷின் வாழ்க்கை வரலாறு மற்றும் பங்களிப்பை விரிவாகக் காண்போம்.

❖ அரவிந்த் அக்ராய்ட் கோஷ் என்ற இயற்பெயர் கொண்ட அரவிந்த கோஷ் அவர்கள், 1872 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் நாள் இந்தியாவின் மேற்கு வங்காள மாநிலத்திலுள்ள கொல்கத்தாவில் கிருஷ்ண தன கோஷுக்கும், ஸ்வர்ணலதாவிற்கும் மூன்றாவது குழந்தையாக ஒரு பெங்காலி குடும்பத்தில் பிறந்தார்.

**ஆரம்ப வாழ்க்கை மற்றும் கல்வி**

❖ ஸ்ரீ அரவிந்தர், தன்னுடைய தொடக்க கல்வியை டார்ஜிலிங்கிலுள்ள "லோரெட்டோ கான்வென்ட்டில்" தொடர்ந்தார். பிறகு 1879 ஆம் ஆண்டு, சகோதரர்களுடன் இங்கிலாந்து சென்ற அவர், கல்வியை அங்கு தொடர்ந்தார். லண்டனிலுள்ள கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழகத்தில், இளங்கலை கல்வியைத் தொடங்கி பட்டமும் பெற்றார். படித்துக் கொண்டிருக்கும் பொழுதே, புரட்சிகரமான சிந்தனையாளராக விளங்கிய அரவிந்த் அவர்கள், உலக இலக்கியங்கள், வரலாறு, புவியியல் என அனைத்தும் கற்றுத் தேர்ந்தவராக விளங்கினார்.

**சுதந்திரப்போராட்டத்தில் அரவிந்தரின் பங்கு**

❖ தன்னுடைய 21 வயது வரை, இங்கிலாந்தில் தங்கி, கல்வி பயின்ற ஸ்ரீ அரவிந்தர், 1893 ஆம் ஆண்டு தாய்நாடு திரும்பினார். இந்தியா திரும்பிய அவர், பரோடா சமஸ்தானத்தில் அரசப் பணியில் சேர்ந்தார். ஏழு ஆண்டுகள் அங்கு பணியாற்றிய பிறகு, வங்காள தேசிய கல்லூரியில் முதல்வராக பணியைத் தொடர்ந்தார்.

❖ இந்தியாவில் கர்சன் பிரபுவின் சூழ்ச்சியால் ஏற்பட்ட வங்கப் பிரிவினையை கண்டு கொதித்துப்போன அரவிந்தர் அவர்கள், விடுதலைப் போராட்டாத்தில் தன்னை ஈடுபத்திக்கொண்டது மட்டுமல்லாமல், கர்சனின் வங்கப் பிரிவினையைத் தீவிரமாக எதிர்த்தார்.

❖ தேச விடுதலைக்காக தன்னை அர்பணித்துக்கொண்ட அவர், **"வந்தேமாதரம்"** என்ற இதழை ஆரம்பித்த பின், சந்திரபாலுடன் இணைந்து பல்வேறு கூட்டங்களில் கலந்துகொண்டு, ஆங்கில அரசுக்கு எதிராக தன்னுடைய எதிர்ப்பை வெளிப்படுத்தினார். இதனால், அரவிந்த் அவர்கள் ஆங்கில அரசால் 1907லிலும், 1908டிலும் இருமுறை கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அதுமட்டுமல்லாமல், **"கர்மயோகி"** என்ற ஆங்கிலப்பத்திரிக்கை மூலமும் **"தர்மா"** என்ற வங்காள மொழி பத்திரிக்கை மூலமும் மக்களிடையே சுதந்திர வேட்கையை தூண்டும் கட்டுரைகளை எழுதி விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினார்.

**ஆன்மீகத்தில் ஈடுபாடு**

❖ சிறையில் இருந்த நேரங்களில் அவர் கீதை, வேதங்கள் என ஆன்மீக நூல்களைப் படித்த அவருக்கு, யோக நெறியில் அதிகம் அக்கறை கொள்ள வைத்தது. 1909 சிறையிலிருந்து விடுதலைப் பெற்ற அரவிந்தர், தன்னுடைய முழுகவனத்தையும் யோக நெறியில் ஈடுபடுத்திக்கொண்டார். 1910 ஆம் ஆண்டு, ஷாம்சுல் ஆலம் கொலை வழக்கில் அரவிந்தர் மேல் குற்றம் சாட்டப்பட்டது. இதனால், அங்கிருந்து தப்பித்து சந்திர நாகூருக்கு சென்று, பிறகு புதுச்சேரியை வந்தடைந்தார். அவரை மகாகவி பாரதியார் தலைமையிலான தமிழர்கள் வரவேற்று, ஒரு சீமானின் வீட்டில் தங்கவைத்தனர். இதையடுத்து, தனது அரசியல் நடவடிக்கைகளை முழுவதுமாகக் கைவிட்டு முழு ஆன்மீகத்தில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். பிறகு, அங்கு ஆசிரமம் அமைத்து தியானத்திலும், யோகத்திலும்

ஈடுபட்டார். அதுமட்டுமல்லால், தனது யோகத்தின் நோக்கத்தை விளக்கிடும் **"சாவித்திரி"** என்னும் மகா காவியத்தையும் ஸ்ரீ அரவிந்தர் படைத்தார்.

**ஸ்ரீ அரவிந்தரின் ஆன்மீக சிந்தனைகள்**

❖ உலகத்தைத் துறந்து, இறைவனை அடையவேண்டும். யோகத்தினால் கிடைக்கும் வலிமையைக் கொண்டு நாட்டு மக்களை விடுவிக்க வேண்டுமென்பதோடு மட்டுமல்லாமல், தன் வளர்ச்சியின் பரிணாமப்படிகள் மனிதனின் பூவுலக வாழ்வினைத் தெய்வவடிவில் அமைக்கும் என்று நம்பினார். தன்னுடைய ஆன்மீக சிந்தனைகளை "ஆர்யா" என்ற ஆன்மீக இதழில், 1914 முதல் 1921 வரை எழுதினார். அவருடைய தத்துவங்கள், உண்மைகளை அடிப்படையாக கொண்டவையாக அமைந்தது.

**இறப்பு**

❖ இந்த மானுட வாழ்வு, தெய்வீக வாழ்வாக மலர வேண்டும்۞ என உழைத்த ஸ்ரீ அரவிந்தர் அவர்கள், 1950 ஆம் ஆண்டு டிசம்பர் 5 ஆம் தேதி காலமானார். ஒரு சுதந்திர போராட்ட வீரராக தன்னுடைய வாழ்க்கையைத் தொடங்கி, பிறகு மகா யோகியாகவும், ஞானியாகவும், மகானாகவும் வாழ்ந்தவர். "பூரண யோகம்" என்ற உத்தியைப் பரப்பி, எல்லோரிடமும் ஆன்மிகம் மலரச்செய்த ஒரு மகான் ஆவார். இறைவனின் வழிகாட்டுதலில் படி, ஆன்மீக பாதையை தழுவி மாபெரும் சாதனை புரிந்து, உலகின் ஆன்மீக ஒளிவிளக்காய் திகழ்ந்த ஸ்ரீ அரவிந்தரின் பணி போற்றத்தக்க ஒன்றாகும்.

## 31. பி.ஆர்.அம்பேத்கார் (1891 - 1956)

❖ விடுதலை இந்தியாவின் முதல் சட்ட அமைச்சராகவும், இந்திய அரசியல் சாசனத்தின் தந்தையாக விளங்கியவர், பீம்ராவ் ராம்ஜி அம்பேத்கர். இவர் ஒரு சமூக சீர்திருத்தவாதியாக மட்டுமல்லாமல், மிகச்சிறந்த பொருளியல் அறிஞராகவும், அரசியல் தத்துவமேதையாகவும், சமூக சீர்திருத்தவாதியாகவும், பகுத்தறிவு சிந்தனையாளராகவும், சிறந்த எழுத்தாளர் மற்றும் பேச்சாளராகவும், வரலாற்று ஆசானாகவும் விளங்கியவர். ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்விருளைப் போக்க, சுதந்திர இந்தியாவின் மாபெரும் தலைவர் என்று போற்றப்பட்டவர், டாக்டர் பி.ஆர் அம்பேத்கர் அவர்கள். தன் வாழ்நாள் முழுவதையும் சமூகத்திற்கென அர்ப்பணித்த மாபெரும் சிற்பியான டாக்டர் அம்பேத்கர் அவர்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் சாதனைகளை காண்போம்.

**பிறப்பு**

❖ பாபாசாகேப் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் என அழைக்கப்படும் பீம்ராவ் ராம்ஜி அம்பேத்கர் அவர்கள், 1891ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14ஆம் நாள், இந்தியாவின் உத்தரபிரதேச மாநிலத்தில் உள்ள மாவ் (இப்போது மத்தியபிரதேசத்தில் உள்ளது) என்ற இடத்தில், ராம்ஜி மாலோஜி சக்பாலுக்கும், பீமாபாயிக்கும் பதினான்காவது குழந்தையாக, பிறந்தார். இவருடைய தந்தை இராணுவப்பள்ளி ஒன்றில் ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தார்.

**ஆரம்ப வாழ்க்கை மற்றும் கல்வி**

❖ "மகர்" என்னும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்த பீமாராவ் ராம்ஜி அவர்கள், சாத்தாராவில் உள்ள ஒரு பள்ளியில் தனது கல்வியைத் தொடர்ந்தார். இளம் வயதில், தனி மண்பானையில் தண்ணிர் குடிப்பது, குதிரை வண்டியில் போகும்போது, தாழ்த்தப்பட்ட பிரிவினர் என்றதும் இறக்கிவிடப்பட்டது, பள்ளியில் படிக்கும்போது, ஒதுக்கிவிடப்பட்டது என பல்வேறு துன்பங்களையும், துயரங்களையும் அனுபவித்தார். ஆனால், மகாதேவ அம்பேத்கர் என்ற பிராமண ஆசிரியர், இவர்மீது அன்பும், அக்கறையும் கொண்டவராக விளங்கினார். இதனால், தன்னுடைய குடும்ப பெயரான பீம்ராவ் சக்பால் அம்பாவடேகர் என்ற பெயரை, பீம்ராவ் ராம்ஜி அம்பேத்கர் என்று மாற்றிக்கொண்டார்.

❖ 1904 ஆம் ஆண்டு, இவருடைய குடும்பம் மும்பைக்கு குடிபெயர்ந்தது. அங்கு "எல்பின்ஸ்டன் உயர்நிலைப்பள்ளியில்" சேர்ந்து கல்வியைத் தொடர்ந்தார். குடும்பத்தில் மிகவும் வறுமை சூழ்ந்த

நிலையிலும், கல்வியை விடாமல் தொடர்ந்த அவர், 1907 ஆம் ஆண்டு தனது பள்ளிப்படிப்பை முடித்தார். பிறகு, பரோடா மன்னரின் உதவியுடன் மும்பை பல்கலைக்கழகத்தில் இளங்கலைப் படிப்பைத் தொடர்ந்த அவர், 1912ல் அரசியல் அறிவியல் மற்றும் பொருளாதாரத் துறையில் இளங்கலைப் பட்டம் பெற்றார். சிறிதுகாலம் பரோடா மன்னரின் அரண்மனையில் படைத் தலைவராகவும் பணியாற்றினார்.

**உயர்கல்வி கற்க அமெரிக்கா பயணம்**

- ❖ பரோடா மன்னர் ஷாயாஜி ராவ் உதவியுடன் உயர்கல்வி கற்க அமெரிக்கா பயணம் ஆனார். உயர்கல்வி பெறுவதற்காக அமெரிக்கா சென்ற முதல் இந்தியர் என்ற பெருமையைப் பெற்ற அம்பேத்கர் அவர்கள், கொலம்பியா பல்கலைக்கழகத்தில் சேர்ந்து, பொருளாதாரம், அரசியல், தத்துவம் மற்றும் சமூகவியல் ஆகிய பாடங்களைக் கற்றார்.
- ❖ 1915ல் ”பண்டைய இந்தியாவின் வர்த்தகம்” என்ற ஆய்விற்கு முதுகலைப் பட்டம் பெற்றார். பின்னர் ”இந்திய லாபப்பங்கு ஒரு வரலாற்றுப் பகுப்பாய்வு” என்ற ஆய்வுக்கு, கொலம்பியா பல்கலைக்கழகம் அவருக்கு டாக்டர் பட்டம் வழங்கியது. மேலும், 1921 ஆம் ஆண்டு ”பிரிட்டிஷ் இந்தியாவில் அரசு நிதியைப் பரவலாக்குதல்” என்ற ஆய்வுக்கு முது அறிவியல் பட்டமும், 1923 ஆம் ஆண்டு ”ரூபாயின் பிரச்சனை” என்ற ஆய்வுக்கு டி.எஸ்.சி பட்டமும் பெற்றார். பிறகு சட்டப் படிப்பில் பாரிஸ்டர் பட்டமும் பெற்றார்.

**சமூகப்பணிகள்**

- ❖ 1923 ஆம் ஆண்டுக்கு பிறகு, இந்தியாவிற்கு திரும்பிய அம்பேத்கர் அவர்கள், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டங்களில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். அதுமட்டுமல்லாமல், சமுதாய அமைப்பிலும், பொருளாதாரத்திலும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அதிகாரம் கிடைக்க போராட வேண்டும் என முடிவுசெய்தார்.
- ❖ ஜூலை 1924ல், ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக **”பஹிஸ்கிருத ஹிதகாரிணி சபா”** என்ற அமைப்பையும் 1927-ல் **சமாஜ் சமதா சங்கத்தையும் (Samaj Samatha Sangh)** துவங்கினார். இதன் மூலம் தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வி மற்றும் சமுதாய உரிமைக்காக போராடினார்.
- ❖ 1930 ஆம் ஆண்டு, லண்டனில் நடைபெற்ற வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்வதற்காக புறப்படும் முன் அவர் கூறியது,”என் மக்களுக்கு என்ன நியாயமாகக் கிடைக்க வேண்டுமோ, அதற்காக போராடுவேன் என்றும், அதே சமயத்தில் சுயராஜ்ய கோரிக்கைகளை முழு மனதுடன் ஆதரிப்பேன் என்றும் கூறினார்.”
- ❖ இரண்டாவது வட்டமேசை மாநாட்டில், பிரதிநிதித்துவம் குறித்த பிரச்சனை முக்கியமாக விவாதிக்கப்பட்டது. தாழ்த்தப்பட்டோருக்கு தனி வாக்குரிமையும், விகிதாச்சார பிரதிநிதித்துவமும் வழங்கப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தினார். இதன் விளைவாக, ஒரு தொகுதியில் பொது வேட்பாளரை தேர்ந்தெடுக்க ஒரு வாக்கும், அதே தொகுதியில் தாழ்த்தப்பட்ட சமூக வேட்பாளரை தேர்ந்தெடுக்க ஒரு வாக்கும் அளிக்கும் ”இரட்டை வாக்குரிமை” முறை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டது. ஆனால், இதை ஏற்க மறுத்த காந்திஜி, உண்ணாவிரதம் மேற்கொண்டார். இதன் விளைவாக, காந்திஜிக்கும், அம்பேத்கருக்கும் இடையே ”பூனா ஒப்பந்தம்” ஏற்பட்டு, தாழ்த்தப்பட்டோருக்கு தனி வாக்குரிமை என்பதற்கு பதிலாக, பொது வாக்கெடுப்பில் தனி தொகுதி என முடிவுசெய்யப்பட்டது.

**தீண்டாமைக்கு எதிராக அம்பேத்கர் நடவடிக்கைகள்**

- ❖ வர்ணாசிரம தர்மத்திலிருந்து தோன்றிய சாதியமைப்பையும், தீண்டாமை கொடுமைகளையும் எதிர்த்து தீவிரமாக போராடிய அம்பேத்கர் அவர்கள், 1927 ஆம் ஆண்டு தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான தீண்டாமைக்கொடுமைகளை எதிர்த்து போராட்டத்தினைத் தொடங்கினார். பிறகு, 1930 ஆம் ஆண்டு தொடங்கிய நாசிக் கோயில் நுழைவு போராட்டத்தினை நடத்தி வெற்றி கண்டார். தீண்டாமை

என்பது ஒரு சமூகப் பிரச்சனை மட்டுமல்லாமல், அது ஒரு அரசியல் பிரச்சினை எனவும் கருதிய அவர் தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தையும் கொண்டுவந்தார். இறுதியில், 1956 ஆம் ஆண்டு ”புத்த மதத்திலும்” இணைந்தார்.

**விடுதலை இந்தியாவின் அரசியல் அமைப்பில் அம்பேத்காரின் பங்கு**

- ❖ ஆகஸ்ட் 15, 1947 ஆம் ஆண்டு, இந்தியா விடுதலைப் பெற்ற பிறகு, காங்கிரஸ் அரசு அம்பேத்கரை சட்ட அமைச்சராக பதவிஏற்றுக்கொள்ளும்படி அழைத்தது. அதன்பேரில், விடுதலைப் பெற்ற இந்தியாவின் முதல் சட்ட அமைச்சராகவும், இந்திய அரசியல் சாசன சபையின் தலைவராகவும் பொறுப்பேற்றார். நவம்பர் 26, 1949 ஆம் ஆண்டு அம்பேத்கர் தலைமையிலான இந்திய அரசியல் அமைப்பு சட்ட வரைவுக்குழு நாடாளுமன்றத்திடம் சட்ட வரைவை ஒப்படைத்தது.
- ❖ அம்பேத்கரால் உருவாக்கப்பட்ட இந்த அரசியல் அமைப்பு, குடிமக்களின் உரிமைகளுக்கு பலவகைகளில் பாதுகாப்பை அளிப்பதாக அமைந்ததோடு மட்டுமல்லாமல், இது மிகச்சிறந்த சமூக ஆவணம் என வரலாற்று ஆசிரியர்களால் போற்றப்பட்டது. ஆனால் இச்சட்டத்தை கொண்டுவருவதில் நேருவுடன் ஏற்பட்ட கருத்துவேறுபாட்டால், 1951 ஆம் ஆண்டு தன் பதவியைத் துறந்தார்.

**பௌத்த சமயம் மீது பற்று**

- ❖ தம்முடைய சமூகப் போராட்டத்திற்கு, தாம் இந்து மதத்தில் இருப்பதே ஒரு பெரிய தடையாக கருதிய அவர், பௌத்த சமயக் கொள்கைகளின் மீது ஈடுபாடுகொண்டு, 1950 ஆம் ஆண்டுக்கு பிறகு பௌத்த சமயத்தின் மீது தன் கவனத்தை செலுத்தினார். இலங்கையில் நடைபெற்ற பௌத்த துறவிகள் கருத்தரங்கின் கலந்து கொண்ட அவர், உலக பௌத்த சமய மாநாடுகளிலும் கலந்துகொண்டார். 1955 ஆம் ஆண்டு ”பாரதீய பௌத்த மகாசபாவை” தோற்றுவித்தார்.1956 ல் ”புத்தரும் அவரின் தம்மாவும்” என்ற புத்தகத்தை எழுதினார். பிறகு 1956 ஆம் ஆண்டு அக்டோபர் 14 ஆம் நாள் பௌத்த சமயத்திற்கு முழுவதுமாக தன்னை மாற்றிக்கொண்டார்.

**அம்பேத்கரின் பொன்மொழிகள்**

- ”ஒரு லட்சியத்தை மேற்கொள்ளுங்கள், அதை அடைவதற்காக விடா முயற்சியுடன் உழைத்து முன்னேறுங்கள்.”
- ”ஆடுகளைத்தான் கோவில்கள் முன்பாக வெட்டுகிறார்களேயொழிய சிங்கங்களை அல்லது ஆடுகளாக இருக்க வேண்டாம், சிங்கங்களைப் போன்று வீறுகொண்டெழுங்கள்.”
- ”நான் வணங்கும் தெய்வங்கள் மூன்று, முதல் தெய்வம் அறிவு, இரண்டாவது தெய்வம் சுயமரியாதை, மூன்றாவது தெய்வம் நன்னடத்தை”.
- ”சமூகத்தை உயர்த்த வேண்டும் என்ற விழுமிய நோக்கத்தில் உந்தப்படுபவரே உயர்ந்த மனிதர்.”
- ”வெற்றியோ, தோல்வியோ, எதுவாயினும் கடமையைச் செய்வோம். யார் பாராட்டினாலும், பாராட்டாவிட்டாலும் கவலை வேண்டாம். நமது திறமையும், நேர்மையும் வெளியாகும்பொழுது பகைவனும் நம்மை மதிக்கத் தொடங்குவான்.”

**இறப்பு**

- ❖ நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டு வந்த அம்பேத்கர் அவர்களுக்கு, 1955ல் உடல் நலம் மோசமடைய தொடங்கியது. தாழ்த்தப்பட்ட மக்களுக்காக தன்னுடைய வாழ்வையே அர்பணித்த பாபாசாகேப் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர், 1956 ஆம் ஆண்டு டிசம்பர் 6 ஆம் நாள் தில்லியிலுள்ள அவருடைய வீட்டில் தூங்கிக்கொண்டிருக்கும் பொழுதே உயிர் நீத்தார்.
- ❖ பௌத்த சமயத்தில் அதிக ஈடுபாடு கொண்டமையால், பௌத்த சமய முறைப்படி இவருடைய உடல் ”தாதர் சௌபதி” கடற்கரையில் தகனம் செய்யப்பட்டது. இவருடைய மரணத்திற்கு பின், இவருக்கு இந்தியாவின் உயரிய விருதான ”பாரத ரத்னா விருது” 1990 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.

- ஒடுக்கப்பட்ட சமூகத்தில் பிறந்து, விடுதலை இந்தியாவின் அரசியல் சாசனத்தையே வரைந்த மாபெரும் சட்டமேதை பாபாசாகேப் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர். பொருளாதாரம், அரசியல், வரலாறு, தத்துவம், சட்டம் என அனைத்து துறைகளிலும் திறமைப்பெற்று விளங்கிய அவர், இந்திய வரலாற்றின் பழமைவாதப் பக்கங்களைக் கிழித்தெறிந்த மாமனிதர். தாழ்த்தப்பட்ட மக்களின் விடிவெள்ளியாய், ஈடு இணையற்ற ஜோதியாய் விளங்கிய சமூகப் போராளி. இப்படிப்பட்ட மனிதரின் வாழ்க்கை, அனைவருக்கும் ஒரு எடுத்துக்காட்டு என்றால் அது மிகையாகாது.

**32. ஆச்சார்ய கிருபளானி** என்று அறியப்படும் **ஜீவிதராம் பகவன்தாஸ் கிருபளானி (நவம்பர் 11, 1888 - மார்ச் 19, 1982)**

- அந்நிய ஆதிக்கத்தின் அடிமைத்தனத்தை களைய, வீறு கொண்டு எழுந்த இந்திய தேசத் தியாகிகளின் வரலாற்றில் , சுதந்திரப் போராளி **திருமதி சுசேதா கிருபளானிக்கும்** மிக முக்கிய இடமுண்டு.
- உத்தரப்பிரதேச மாநில முதல் பெண் முதலமைச்சராகப் பதவி வகித்ததின் மூலம் இந்திய மாநிலத்தின் முதல் பெண் முதல் அமைச்சர் என்ற பெரும் பேற்றையும் பெற்றவர் சுசேதா அவர்கள். வங்காளக் குடும்பத்தைச் சேர்ந்த எஸ்.என்.மஜீம்தார் என்பவருக்கு 1906 ஆம் ஆண்டு ஹரியானா மாநிலம், அம்பாலா எனும் ஊரில் பிறந்தார். இவர் தந்தை அரசாங்க மருத்துவராகவும், தேசியவாதியாகவும் இருந்தவர். தில்லியிலுள்ள இந்திரப்பிரஸ்தா மற்றும் செயிண்ட்.ஸ்டீபென் கல்லூரிகளிலும் தம் கல்வியைப் பெற்றவர். இதற்குப் பிறகு சுசேதா பெனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக பணியில் அமர்ந்தார்.
- 1936 ஆம் ஆண்டில் மாபெரும் சோசலிசத் தலைவரான, ஆச்சார்ய கிருபளானியைச் சந்தித்து, பல எதிர்ப்புகளிடையே அவரைத் திருமணம் செய்து கொண்டார். திரு. ஆச்சார்ய கிருபளானியின் சகோதரி கிகிபெஹன், இத்திருமணத்திற்கு பெரிதும் எதிர்ப்பு தெரிவித்ததன் காரணமாக அவரைப் பற்றி நன்கு அறிந்த சுசிலா நய்யார் அவர்கள், கிருபளானி அவர்களின் சகோதரி இத்திருமணத்திற்கு எதிர்ப்பு தெரிவித்ததன் முக்கியமான காரணம், அவர்கள் இருவருக்கும் உள்ள அதிகப்படியான வயது வித்தியாசம்தான். திரு கிருபளானியின் வயது ஐம்பதைத் தாண்டியிருந்த போது, சுசேதாவின் வயது 20 களில் இருந்ததுதான். மேலும் கிகிபெஹன் அவர்கள் , தாம் எழுதிய ஒரு கடிதத்தில், தங்கள் குடும்பத்தில் ஆண்கள் அதிக நாட்கள் உயிர் வாழுவதில்லை என்பதால் , இந்த வயதில் , அவ்வளவு வயது வித்தியாசம் உள்ள ஒரு பெண்ணை மணமுடிப்பது சரியல்ல என்பதால்தான் அப்படிச் சொன்னார், என்கிறார். ஆனால் சுசேதாவோ, இத்திருமணத்தில் மிக உறுதியாக இருந்தார். காரணம், தாங்கள் இருவரும் நல்ல நட்பின் மூலம் மிக நெருங்கி விட்டதாலும், தங்கள் இருவருக்கும் பல விசயங்களில் ஒத்துப் போவது மட்டுமல்லாமல், பல செயல்பாடுகள் தங்கள் இருவருக்கும் பொதுவானதாக இருப்பதாலும், அனைத்திற்கும் மேலாக தாங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் மிகவும் நேசிப்பதாலும், தாம் திருமணம் செய்து கொள்வதில் உறுதியாக இருப்பதாகச் சொல்லியிருந்தார். மேலும் தாங்கள் இருவரும், தங்கள் முடிவைத் தாங்களே எடுக்கும் அளவிற்கு வயது முதிர்ந்தவர்கள் என்பதாலும், தாங்கள் திருமணம் செய்து கொள்ளாவிட்டால, சமுதாயத்தில் தேவையில்லாத விமர்சனங்களுக்கு ஆளாக வேண்டியிருக்கும் என்பதாலும் தாங்கள் கட்டாயம் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார் சுசேதா. அதே அளவிற்கு திரு ஆச்சார்ய கிருபளானியும், சுசேதாவை திருமணம் செய்து கொள்வதில் ஆர்வமாகவும், விருப்பமாகவும் இருந்தார். அண்ணல் காந்தியடிகளும் இதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை. இருப்பினும் சுசேதா அவர்கள் காந்தியடிகளுக்குத் தெரியப்படுத்தாமலே கிருபளானி அவர்களைத் திருமணம் செய்து கொண்டார்.
- இந்திய தேசிய காங்கிரசுடன் இணைந்து, சுதந்திரப் போராட்ட இயக்கத்தில் தீவிரமாகப் பங்கு கொண்டார் சுசேதா அம்மையார். தாம் எடுத்த முடிவில் மிக உறுதியாக நிற்கும் நெஞ்சுரம் கொண்ட ஒரு பெண்மணியாகவே இவரைக் காண முடிகிறது. 1946ஆம் ஆண்டில், காந்தியடிகளின் ஆலோசனைப்படி, சுசேதா, கஸ்தூரிபா காந்தி தேசிய நினைவு அறக்கட்டளையின், ஒருங்கிணைப்புச்

செயலாளராக நியமிக்கப்பட்டார். இந்த அறக்கட்டளையின் செயலாள்ரான திரு தக்கர் பாபா அவர்களுடன் நாடு முழுவதும் சுற்ற வேண்டி வந்தது. இவருடைய பெற்றோர் மிக வலுவான பஞ்சாப் மாநிலத்தின் மண்ணில், தைரியமான ஒரு சூழலில், கொள்கைப் பிடிப்புகளுடன் வாழக்கூடிய , பிரம்ம சமாஜத்தில் அதிக மத நம்பிக்கைக் கொண்டவர்கள். இவரும் இந்து மதக்கலாச்சார ஒருங்கிணைப்பில் மிகுந்த ஆர்வம் கொண்டவராக இருந்தார்.

- அதே ஆண்டில் திரு. கிருபளானியை, இனவாதத்தினால் பேரழிவை ஏற்படுத்திக் கொண்டிருந்த நவகாளி எனும் இடத்திற்கு மகாத்மா காந்தி அனுப்பி வைத்தார். 1942 இன் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில், அருணா அசப் அலி மற்றும் உஷா மேனன் ஆகியோருடன் , இவரும் கலந்து கொண்டார். இனவாத தீவிரவாதத்தின் போது காந்தியடிகளுடன், சுசேதாவும் நவகாளிக்குச் சென்று கடுமையாக உழைத்தார். கிருபளானி அவர்கள் திரும்பி வந்த போதும் சுசேதா அங்கேயே சில காலம் தங்கி, பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு தாயாக இருந்து ஆறுதலளித்தார்.
- சுசேதா கிருபளானி, வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் தீவிர பங்கேற்பின் மூலமாக இந்திய வரலாற்றுக் காட்சிப் பெட்டகத்தில் தம்முடைய பிம்பமும் பதியச் செய்தவர். பிரிவினைக் கலவரங்கள் நடந்த சமயங்களில் சுசேதா, அண்ணல் காந்தியடிகளுடன் தோள் கொடுத்து அரும்பணியாற்றினார். 1946ஆம் ஆண்டில் நவகாளி பயணத்தில் அண்ணலுடன் தானும் கலந்து கொண்டிருந்தார். அரசியலமைப்பு மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட சொற்பமான எண்ணிக்கையிலான பெண்களில் சுசேதாவும் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்திய அரசியலமைப்பின், அதிகாரப்பத்திரம் அமைக்கும் பெரும்பணியை செயல்படுத்தும் திட்டக்குழுவின் ஓர் அங்கமானார். இந்திய சுதந்திரத் திருநாளன்று, அரசியலமைப்பு மன்றத்தின் சுதந்திர அமர்வு நிகழ்வில் வந்தே மாதரம் என்ற தேசியப் பாடலையும் அழகாகப் பாடினார்.
- சுதந்திரத்திற்குப் பிறகு, உத்திரப்பிரதேச அரசியலில் ஒரு கருவியாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தார். 1952ம் ஆண்டு மற்றும் 1957ம் ஆண்டிலும், சட்டசபைக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1948இல் காந்தியடிகள் இறந்த பிறகு அரசியலில் பலப்பல மாற்றங்கள் ஏற்பட்டன. ஆச்சார்ய கிருபளானி, ஜவஹர்லால் நேரு அவர்களிடம் கொண்ட கருத்து வேறுபாட்டினால், காங்கிரசு தலைமைப் பதவியை ராஜினாமா செய்துவிட்டு, கிரிஷக் மஸ்தூர் பிரஜா கட்சி என்ற கட்சியை நிறுவி, 1952இன் தேர்தலுக்குத் தயாரானார். இந்தத் தேர்தலில் காங்கிரசு கட்சியின் மன்மோகினி சேகல் என்பவரை வென்றார். இவர் ஐக்கிய நாடுகள் சபையின் இந்தியப் பிரதிநிதியாகவும் இருந்துள்ளார். சுசேதா பின்னாளில் திரும்பவும் காங்கிரசினுள் வந்தாலும், கிருபளானி மனம் மாறவில்லை. இருவரும் வெவ்வேறு கட்சிகளில் பணியாற்றினாலும், சுசேதா அவர்கள் தம் கணவருக்கு ஆற்றக்கூடிய தொண்டுகளை உடனிருந்து செய்ததோடு, அவர் உடல் நலத்தில் அக்கரையும் எடுத்துக் கொண்டார். தாம் ஒரு சிறந்த அமைப்பாளர் என்பதை, கிருபளானி அவர்கள் காங்கிரசு கட்சியை விட்டு வெளியேறியவுடன், பங்கேற்ற பல்வேறு கட்சிகளின் அமைப்புகளில் உறுதுணையாக இருந்ததன் மூலம் நிரூபித்தார் சுசேதா அம்மையார்.
- சிறுதொழில் அமைச்சராகவும், பணியாற்றினார். 1962ஆம் ஆண்டில் உத்திரப் பிரதேச சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1963 ஆம் ஆண்டு உத்திர பிரதேசத்தில், முதல் பெண் முதல் அமைச்சர் என்ற கௌரவத்தையும் பெற்றார். இக்காலகட்டத்தில், அரசு ஊழியர்களின் 62 நாட்கள் வேலை நிறுத்தத்தை கையாண்ட விதம் இவருடைய முக்கியமான சாதனைகளுள் ஒன்று. ஒரு திறமையான நிர்வாகி என்பதை பல வழிகளிலும் நிரூபித்துக் கொண்டிருந்த காலகட்டமும் அதுதான். அலுவலகத்திற்கு சரியாக காலை 10 மணிக்குச் சென்று, அங்கு பம்பரமாகச் சுழன்று பணிபுரிந்து, மாலை 7 மணிக்கெல்லாம், அன்று கையெழுத்திட வேண்டிய கோப்புகள் அனைத்தையும் எடுத்துக் கொண்டு வந்து, இரவு படுக்கப்போகும் முன் அத்தனை கோப்புகளையும் ஒன்று விடாமல் நன்கு வாசித்து, பிறகுதான் கையெழுத்திட்டு விட்டு ஓய்வெடுக்கப் போவது வழமை. ஒரு முதல் அமைச்சராக இவருடைய எளிமையைக் கண்டு, லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் மிகவும் ஆச்சரியப்பட்டுப் போனார்.

- 1971ஆம் ஆண்டில் அரசியலில் இருந்து ஓய்வு பெற்றவுடன், புது தில்லியில் இருவரும் சுகமாக குடும்பம் நடத்தினர். ஒரு நல்ல மனைவியாகவும் தம் பங்களிப்பைக் குறிப்பிடும்படி நிறைவேற்றினார் சுசேதா அம்மையார். இல்லஸ்டிரேடட் வீக்லி என்ற பத்திரிக்கையில் தம்முடைய சுயசரிதையின் சில பகுதிகளையும் எழுதியுள்ளார் அம்மையார். இவர்களுடைய வருமானம், சேமிப்பு அனைத்தும், தில்லியின் ஏழை எளிய மக்களுக்குச் சேரும் வகையில் லோக் கல்யாண் சமிதி என்ற அமைப்பில் சேர்க்கப்பட்டது. அருமையான பல சேவைகள் இதன் மூலம் நிறைவேற்றப்பட்டன.
- சமூகப் பணிகளில் தாம் எடுத்துக் கொள்ளும் தீவிர கவனமும், அக்கரையும், தனக்கென்று வரும்போது நேர் மாறாக நடந்து கொள்வார் சுயநலமற்ற இந்த சமூக சேவகி. சிம்லா மலைப்பிரதேசத்தில் இவருடைய நான்கு சக்கர வாகனத்திற்கு ஏற்பட்ட பெரிய விபத்தினால், முதுகுத் தண்டுவடத்தில் பாதிப்பு ஏற்பட்டாலும் அதிலிருந்து குணமாகி மீண்டு வந்தார். ஓய்வில்லாத உழைப்பும், சமூகச் சேவைகளும், தம் உடல் நலத்தில் கவனம் செலுத்த இயலாத அளவிற்கு கொண்டு சென்றதன் காரணமாக, 1972ஆம் ஆண்டில், இருதய பாதிப்பு ஆரம்பித்து, இரண்டு முறை மாரடைப்பும் ஏற்பட்டது.
- 1974ஆம் ஆண்டில், திரு கிருபளானியின் உடல் நிலையில் பாதிப்பு ஏற்பட்டு, படுக்கையில் இருந்தார். இடைவிடாத இறுமல் தொல்லையும், மூச்சடைப்பும் ஏற்பட்டிருந்தது. இரவு பகல் பாராது அம்மையார் உடனிருந்து அவரைக் கவனித்துக் கொண்டார். தமக்கு இருந்த இருதய நோயை சிறிதும் சட்டை செய்யாமலும், கணவரிடம் அது பற்றி துளியும் வெளிக்காட்டாமலுமே இருந்திருக்கிறார். 1974ஆம் ஆண்டில், நவம்பர் 29ஆம் நாளில், திரும்பவும் மற்றொரு முறை மாரடைப்பு ஏற்பட்டுள்ளது. மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு தீவிர சிகிச்சை அளித்த பின்பும், டிசம்பர் 1ஆம் தேதியன்று அவருடைய இன்னுயிர் அமைதியாகப் பிரிந்தது. அருகில் ஆதரவற்ற நிலையில் கணவர் கிருபளானி சோகமே உருவாக அமர்ந்திருக்க அம்மையார் மீளா உறக்கத்தில் ஆழ்ந்திருந்தார்.
- தம்முடைய அறிவாற்றல், கடின உழைப்பு, ஆழ்ந்த கவனம், சிரத்தையான பழக்க வழக்கங்கள், நேர்மை, உண்மை, எளிமை, சுயநலமின்மை, நல்லொழுக்கம், சுய கட்டுப்பாடு என இப்படி அனைத்து நற்குணங்களும் ஒருங்கே அமையப் பெற்ற தன்மையால், சுசேதா கிருபளானி அம்மையார் எக்காலத்தும், பொது வாழ்வில் சாதிக்க எண்ணுபவர்களுக்கு ஒரு முன்னோடியாகத் திகழ்பவர் என்பதில் சிறிதும் ஐயமில்லை.